# சிற்பியின் தியாகம்.

THE MADURA TAMIL SANGAM

ஆக்கியோன்:

குடந்தை, எஸ். டி. பாலு

★

வெளியிடுவோர்:

ஸ்ரீ ராஜேஸ்வரி பப்ளிஷிங் ஹவுஸ்,

18, மேலச்சித்திரை வீதி, மதுரை.

பிராஞ்சு: மேட்டுத்தெரு, சேலம் டவுன், சேலம்.

1956

மதுரை
THE MADURA TAMIL SANGAM

லலிதா பிரிண்டர்ஸ் பிரைவேட் லிமிடெட்
18, வடக்கு வெளி வீதி,
மதுரை-56.

பரிசுப் பதிப்பு ரூ. 1—8—0

# முகவுரை

தமிழ்நாட்டுச் சிற்பிகளின் பெருமையை உலகம் நன்கு அறியும். கல்லெல்லாம் கலையாக்கி அக்கலையில் கடவுளைக் கண்டவர்கள் அவர்கள். இவ்வகையில் சிக்கல், எட்டுக்குடி, என்கண் என்ற ஊர்களிலமைந்து விளங்கும் முருகனின் திருவுருவங்களை உருவாக்கிய சிற்பியின் வாழ்வை முப்பெரும் பகுதியாகக் கூறுவதே இந்நூல். சிற்பியின் செந்தண்மையும், இசைப்புலவரின் ஏற்றமும், கலைஞர்களின் மகளார் செய்த கலைப்பணிகளும், பழமையின் பண்பாடுகளும் இந்நூலில் சிறந்து விளங்கக் காணலாம். சிற்பவாழ்வு சிறப்புற வேண்டும் என்ற நோக்கத்துடன் கதைத் தொடர்போடு எனக்கியல்பாகவே வழிபடு கடவுளாக அமைந்த முருகப்பெருமான் கண்ணருளால் இதனை எழுதினேன்.

இதனை வெளியிட்டுதவிய மதுரை ஸ்ரீ இராஜேஸ்வரி பதிப்பகத்தாருக்கும், நூல் உருவாக பல வழிகளில் உதவிய நண்பர்கள் பசுமலை உயர்பள்ளித் தமிழாசிரியர்களான திரு. வித்துவான், வீ. ப. நடராசன் அவர்கட்கும், திரு. புலவர்மணி, வித்துவான், தி. கி. சுந்தரமூர்த்தி அவர்கட்கும், உளங்கனிந்த நன்றி.

தமிழறிஞரும் பெருமக்களும் இதனையாதரித்து, இலக்கியப் பணி செய என்னை மேலும் ஊக்குவிக்குமாறு வேண்டிக் கொள்கிறேன்.

மதுரை
29-8-56

குடந்தை எஸ். டி. பாலு.

# உள்ளுறை


| | | |
|---|---|---|
| 1. | தோற்றுவாய் ... ... | 1 |
| 2. | சிக்கல் ... ... | 6 |
| 3. | எட்டுக்குடி ... ... | 27 |
| 4. | என் கண் ... ... | 92 |

# சிற்பியின் தியாகம்

THE MADURAI TAMIL SANGAM

## தோற்றுவாய்

**த**மிழ்நாட்டிலுள்ள சிற்பங்களைக் கவனிக்கும்போது ஒவ்வொன்றும் உயிருள்ள பழங்கால ஆசிரியனைக் காட்சியளிக்கிறது. எத்தனையோ படையெடுப்புகள், வெளிநாட்டு உணர்ச்சிகள், வாத பிரதிவாதங்கள், இவ்வளவு நிகழ்ச்சிகள் நாட்டில் நடந்தும், நம் சிற்பத்தின் சாயலை மாற்றமுடியவில்லை. அதற்குக் காரணம் சிற்பத்தைச் செய்த பரம்பரையின் தெய்வீக அருள்தானென்பதை மறுப்பாரில்லை.

இன்று நாட்டிய அரங்கேற்றங்கள் நடைபெறுகின்றன. நட்டுவரங்கம் செய்தவர்களின் பெயர்களும் வெளிவருகின்றன. ஐம்பது பெண்களை அரங்கேற்றம் செய்துவிட்டால், அதற்குப் பொன்விழா நடத்தவும் தயார் செய்துவிடுகிறார்கள். அந்த ஐம்பது பெண்களும் நாட்டியமாடுவதைப்பார்த்தால், நடன உலகமே மறைந்து விடக்கூடாதாவென்ற எண்ணம்தான் தோன்றும். நடனத்தை அடிப்படையாகக் கொண்டே தெய்வங்களை அமைத்திருக்கிறார்கள். காவல் காக்கும் காவலாளியைக் கூட நடன பாவத்தில்தான் அமைத்தார்கள். நடனத்தைப் புதுமைப்படுத்திய தற்காலக் கலைஞர்கள் இன்னும் அந்தப் பழமையைப்போல் செய்ய முடியவில்லை. கற்களில்தான்

கலையை வைத்தார்கள். காரணம், ஏடுகளிலிருந்தால் மாற்று நாட்டுப் படையெடுப்பில் கொள்ளை போய்விட லாம் என்று அசையாத கற்களில் செய்தார்கள். கலையைக் கற்றுக்கொள்பவனும், கலையை அனுபவிப்பவனும், கல் போன்ற உள்ளம் படைத்தவனு யிருக்கவேண்டும். கல் போன்ற உள்ளத்தில் சிந்தனைச் சிற்றுளி கொண்டு, பகுத்தறிவுப் பதுமையாக்கிவிட்டார்கள். ''பகுத்தறிவு'' என்ற பெயர் மனிதனுக்கு மட்டும்தான் உண்டெனச் சொல்வதைவிடச் சிற்பங்களுக்கும் உண்டெனவே நினைக்கவேண்டிவருகிறது. ஏனெனில், மனிதனின் பகுத் தறிவு அவன் பழக்கத்திற்குத் தகுந்தவாறு உபயோகப் படுத்தப்படுகிறது. காலநிலைக்குத் தகுந்தவாறு தன்னையே மாற்றிக்கொள்கிறான். பகுத்தறிவு புதுமை பெருகேற்று கிறான். ஆனால் சிற்பங்களின் பகுத்தறிவு தன்னிலைமை விட்டு மாறாமல் ஒரே நிலையில் வாழ்க்கையைக் கொண்டு வந்து நிறுத்தி எங்களைப்போல் நீடித்து வாழ வசதி யுண்டு எனச் சொல்லாமல் சொல்வதுபோலிருக்கிறது. மீண்டும் சொல்கிறது ''கற்களுக்குப் பகுத்தறிவு உண்டா'' என்ற வினாவை எங்களைக் கேட்கலாம். எங்களைச் சிலைக ளாக அடித்தவன் உங்கள் இனத்தவன். உலக இன்பத்தை மறந்து, வாழ்க்கையை மறந்து, தன் உறுப்புக்களிடையே தோன்றும் உணர்ச்சியை மறந்து, எங்களிடமே யாவும் உள்ளன என்ற நம்பிக்கையில் வாழ்ந்தவன்தானென் பதை ஞாபகப்படுத்துகிறோம். அவன் உள்ளத்தில் வளர்ந்த வளர்ச்சி எப்படிப்பட்டதென்றால், பரம்பரை பரம்பரையாக வருபவர்கள் எங்களைப் பார்த்து வியக்கின் றார்கள்.

எங்களைப் பார்த்துப் படம் பிடித்து, மெருகான காகிதத்தில் அச்சிட்டு விளம்பரம்செய்பவர்கள், எங்களின் **கர்த்தாக்களைப்** பற்றி ஒரு வார்த்தைகூடச் சொல்ல மாட்டார்கள். மாபெருங் கோவில்களைக் கட்டிய மன்னர் கள் தன் பெயரைத்தான் சூட்டிக்கொண்டார்களே தவிர, எங்களை ஆக்கியோரின் பெயர் யாருக்காவது தெரியுமா? தன்னலமில்லாதவன், பொன்னுடை போர்த்திக்கொள்ளா தவன், உள்ளத்தைவிடத் தன்னைப் படைத்தவன் எப்படி யிருப்பானென்ற ஆராய்ச்சியிலிறங்கினுன். நமக்கு இரண்டு கைகளைப் படைத்தவனுக்கு ஏன் நான்கு கைகளிருக்கக் கூடாதெனவே நினைத்தான். நம்மைவிட நம்மைப் படைத்தவன் அதிக ஆற்றலுடையவனுயிருக்க வேண்டுமென்ற எண்ணம் தோன்றிற்று. நம்மைவிடச் சிறந்த உருவங்களையும், பார்வைக்குப் பயங்கரமான கண்களையும் சில தெய்வங்களுக்கு ஏற்படுத்தினுன். இத்தனையும் செய்த கலைஞன், தெய்வத்திற்கு வாழ்க்கைத் துணைவியும் ஏற்படுத்தினுன். தெய்வத்திற்கு ஏன் துணைவி என்ற வினு எழலாம். தன்னை வணங்கும் மனிதன், வாழ்வில் தன்னைப்போல் ஏகபத்தினி விரதனுகவும், பெண் தன் தலைவனைத் தவிர வேறு ஒருவனை நாடா உள்ளமும், அமைவதற்கேதான் அமைத்தான். பரமசிவனுடைய ஒரு பிள்ளைக்கு யானைத்தலை. மற்றொரு பிள்ளைக்கு ஆறு தலை. மதம் பிடித்த மனிதனின் கருத்தை வைத்து ஒரு பிள்ளையும், மதம் தெளிந்தபின் ஏற்படும் ஆறுதலை யுடைய பகுத்தறிவை ஒரு பிள்ளையுமாக வைத்தான். "இவ்வளவையும் நீங்கள் கேட்டுக்கொண்டிருந்தால்

போதுமா? நீங்களும், சிலைகளுக்கு மதிப்புக் கொடுப்பதைப்போல் சிலைகளைச் செய்த சிற்பிகளுக்கும் மதிப்புக் கொடுக்கவேண்டாமா?" என்று சொல்வதுபோல்தான் ஒவ்வொரு சிலையுமிருக்கிறது.

இத்தனை அற்புதங்களைச் செய்து வைத்த சிற்பியின் பரம்பரைகளில் ஒருவனின் சரிதையைத்தான் சொல்வதற்கு இந்நூல் தோன்றுகிறது. சிற்பியாக வரவேண்டுமென்றால், சகல சாஸ்திரங்களிலும் தேர்ச்சி பெற்றவனாயிருக்கவேண்டும். நிமித்திகம் அவசியம் தெரிந்திருக்க வேண்டும், தான் கட்டும் கோவில் எவ்வளவு நாள் பாழடையாமலிருக்குமென்று தெரிய வேண்டும். தான் அடிக்கும் உருவங்கள் எத்தனை நாட்களுக்கு உயிர்வாழும் என்றும் தெரியவேண்டும். கோவில் கட்டும் இடத்தின் தன்மையும், இடத்திற்குக் கீழ் நீரோட்ட முண்டா என்பதையும் தெரிந்துகொள்ளவேண்டும். இத்தனையும் தெரிந்தவன் கட்டிய கோவில்கள் தான் நீடூழி காலத்திற்கு மறையாமல் காட்சியளிக்கின்றது. கோவில் கட்டிய பிறகு, ஊரும் அபிவிருத்தியடைய வேண்டுமென்றும் திட்டமிட்டிருக்கிறான். நாட்டிற்கு நாடு உறவு, பண்ட மாற்றுதல், ஒன்று சேர்ந்து ஒருவருக்கொருவர் அறிமுகமாகுதல், நாகரீக வளர்ச்சி, கயமைத்தனம் கலந்த களவு, கூடா ஒழுக்கங்கள், அதற்காக அனுபவிக்கும் தண்டனை, இத்தனையையும் திருவிழா என்ற முறையில் பெருங் கூட்டத்தைக் கூட்டி ஏற்பாடு செய்தான். திருநாட் காரணமாக உடை மாறுதல், நகையின் நிலைமை, மக்களின் மொழி நிலைமை முதலியவற்றைத் திருத்திக்கொள்ள

வாய்ப்பிருக்கிறது. வாய்ப்புகளிலும், கெட்டவனைக்கூட திருவிழா என்ற முறையில் திருத்திவிடவும் முயற்சி செய்யலாம்.

அந்த முயற்சியோடு ஊருக்கு ஒருவிதமான கோவிலையும், தெய்வத்தையும் அமைத்து, பலவழிகளிலும் மக்களை கடவுட்டன்மையில் திருப்பினன். சிற்பி சிலைக்கு உயிர் கொடுத்து அமைத்த காரணத்தால் தான், பல காலங்கள் பலஉயிர்கள் வழிபாடு நடத்திக்கொண்டே வருகிறது. சிலையைச் செய்த சிற்பி மறைந்து விடுகிறான். அவன் செய்த சிலைகள் என்றும் மறையாமல் காட்சியளிக்கின்றன.

அவ்விதமான சிலைக்கு உயிர்கொடுத்த தன் அங்கங்கள் ஒவ்வொன்றையும் தியாகம் செய்த சிற்பியின் வரலாற்றைத் தமிழகமக்கள் உணரவேண்டும். நாகையையடுத்த **சிக்கல்**, திருநெல்லிக்காவலை யடுத்த **எட்டுக்குடி**, பெரும்பண்ணையூரை யடுத்த **என்கண்** இம்மூன்று ஊர்களும்தான் நம் சிற்பியின் வரலாற்றில் ஈடுபடும் ஊர்கள். இம்மூன்றும் தஞ்சை மாவட்டத்திலுள்ளவை. சிக்கல் நாகையிலிருந்து மேற்கேமூன்றுமைல். திருநெல்லிக்காவலிலிருந்து கிழக்கே ஏழுமைல் எட்டுக்குடி. பெரும்பண்ணை ஊரிலிருந்து தெற்கே இரண்டு மைல் என்கண். இம்மூன்று ஊர் முருக உருவங்களும் ஒரே சிற்பியால் செய்யப்பட்டவை.

## சிக்கல்.

சிக்கலில் சிங்கார வடிவேலனைச் சிறப்பாக அமைக்கிருன். பார்ப்பவர் வியக்க வேலை செய்கிருன். கோவில் நிர்வாகிகள்கூட ஆச்சரியப்படுகிருர்கள். அதைப் பார்த்தவுடன் இந்தச் சிலைபோல் வேறு எந்தவிடத்திலு மிருக்காமல் செய்யவேண்டுமென நினைக்கிருர்கள். சுயநலம் காரணமாகக்கூட அல்ல. கலைத்திறனுக்குச் சிக்கல் ஒரு எடுத்துக்காட்டாக விருக்கவேண்டுமென்று தீர்மானிக்கிருர்கள். அதற்கு என்ன செய்வதென்று புரியவில்லை. அந்த ஊரில் வசிக்கும் கலைஞனெருவன் உருவத்தைப் பார்த்து அழுக்காறடைகிருன். அவனுக்கு இது ஒரு வாய்ப்பாகக் கிடைக்கிறது. கலைஞன் கோவில் தர்மகர்த்தாக்களை நெருங்கிப் பேசலாஞன்.

கலைஞன் : ஐயா, முருகனென்ருலே அழகன். அழகுக்கும் அழகு. அழகைக் கலந்து வடிவாக்கிய உருவம் தான் நம் முருக வடிவம்.

தர்மகர்த்தா: ஆம், ஆண்டவனில்லையென்று சொல்பவன் நம் முருகனைப் பார்த்தால், தாண்டவமாடும் கலையின் வடிவுதான் என்று நம்பிவிடுவான்.

கலை : சிற்பக்கலையிலும் உயிருண்டென்பதை உண்மையென விளக்கிவிட்டான். அவனுக்குப் பரிசு என்ன கிடைக்குமோ ?

தர் : அதைத்தான் நானும் யோசித்துக்கொண்டிருக்கிறேன். சிறந்த முறையில் அமையவேண்டும்.

கலை ; எனக்கு ஒரு சந்தேகம்.

தர்ம : என்ன சந்தேகம் வந்துவிட்டது ?

கலை : இன்னொரு இடத்தில் இந்தமாதிரி சிலை அடிக்கக் கூடாதென்று நினைக்கிறீர்கள். பரிசு நல்லபரிசாகத் தந்தால், நமது வேலைத் திறமை மிகச் சிறந்த தென்று எண்ணி, அடுத்த ஊரில் இதைவிடச் சிறந்ததாகச் செய்தால் இதைவிட நல்ல பரிசு கிடைக்குமென்ற எண்ணம் தோன்றலாமல்லவா?

தர்ம : யோசிக்கவேண்டிய கட்டம்தான். நாம் ஏதாவது உறுதி வாங்கிக்கொண்டால் என்ன ?

கலை : உறுதி எவ்வளவுநாட்களுக்கு நீடிக்கும். கலைஞன் உள்ளம் ஒரு கட்டுப்பாட்டுக்கு அடங்கியதல்ல. கற்பனை தோன்றி கருத்துலகத்தில் சஞ்சரிக்கும் காலத்தில் எவ்விதமான எண்ணமும் தோன்ருமல் கலையிடம்தான் செல்லும்.

தர்ம : கலைஞர் உள்ளம் கலைஞருக்குத்தான் தெரியும். அதனுல் நீர் யோசித்து நாளை சொல்லும்,

கலை : தாமதமும் வேண்டாம். கலையிடம் கொண்ட காதலைக் காமமாக எண்ணும் பெருமைக்காரர் களுக்குச் சற்று தாமதம்தான் ஏற்படும்.

தர்ம : யாரைப்பற்றித் தாகைப் பேசுகிறீர் ?

கலை: என்னைப்பற்றியல்ல. கலைஞர்களைப்பற்றி, காதல் கலையிடம். காமம் பரிசினிடம். பொருமை மற்றொருவனின் வெற்றியிடம். இது கலைஞர்களின் வாழ்க்கை அடிப்படை நிலை.

தர்ம: சரி. நாளைச் சந்திப்போம்.

கலைஞன் புறப்பட்டு வீடு வந்து சேருகிருன். வீடு வந்து சேர்ந்ததும், நடனமாடச் சென்ற தன் மகள் "வீணுன எண்ணம், பாழாகுமே திண்ணம்" என்ற பல்லவியைப் பாடி அதற்கு அபிநயம் பிடித்துக்கொண்டே வருகிருள். முதலடியை நினைக்காமல், பாழாகுமென்பதை மட்டும் சிந்திக்கிருன். எதைப் பாழாக்கிஞல் கலைஞன் பாழாகுவானென்பதையே உருப்போடுகிருன்.

அன்றிரவு, நடனக் கலை ஆசிரியர் கலைஞனின் வீட்டுக்கு வருகிருர். நாளைமறுநாள் நாகை நீலாயதாட்சி கோவிலில் நடனமிருப்பதாகச் சொல்லி, புதிதாக எழுதிய பாட்டைச் சொல்லிக்கொடுப்பதற்கு வந்ததாகச் சொல்கிருர். கலைஞன் சம்மதிக்கிருன்.

பாட்டுத் தொடங்குகிறது. பாட்டில் சிற்பிக்குக் கட்டைவிரல் சிறப்பு. நடனத்திற்குக் கட்டையடி சிறப்பு என்ற அடிகள் வருகிறது. கட்டை தட்டும் ஒலியைக் கவனித்தால்தான் தாளம் தவருமல் ஆடமுடியுமென்ற கருத்தும் வருகிறது. அதுபோல் சிற்பியின் கட்டை விரல் சிற்றுளியைப் பற்றிப் பிடிக்காவிட்டால், அவனின் உள்ளத்திலெழும் கற்பனை பயன்படாதென்ற கருத்தும்

வருகிறது. இதைக் கவனித்ததும் கலைஞனுக்கு ஒரு வழி பிறந்துவிட்டது. வடிவேலனையடித்த சிற்பிக்குக் கட்டை விரலை வெட்டிவிடுவதுதானென்று முடிவு செய்கிறான். இரவு முழுதும் ஆழ்ந்த யோசனையிலிருக்கிறான். கலைஞனின் மகள் நாட்டியம் முடிந்து வெகு நேரமாகியும் தந்தை ஆழ்ந்த சிந்தனையில் மூழ்கியிருப்பதைக் கவனிக்கிறாள். தன் நடன ஆசிரியன் விடைபெற்றுச் சென்றதையும் கவனிக்காமலிருப்பதையும் பார்த்து, " அப்பா என்ன யோசனை ? தன்னை மறந்து யோசிக்கிறீர்கள் "

கலைஞன் : தன்னை மறந்து கலையிடம் காதல் கொண்டவனுக்குத் தண்டனை என்றால் ! அதுவும் கலையின் பெயராலா?

மகள் : என்னப்பா உளறுகிறீர்கள். கலைஞனுக்குத் தண்டனை நீங்களே தந்தால், அந்தக் கலை சாகாது. புதிய உயிர்தானுண்டாகும்.

கலை : நிதானமாக, மகளே ஏதோ உன் நடனத்தைப் பார்த்து மறந்து சொல்லிவிட்டேன். நீ போய் படுத்துறங்கு.

மகள் : அப்பா, உறங்குவது என் உடல்; உள்ளம் என்றுமே உறங்கியதில்லை. சதா நடனத்தின் கற்பனையிலேயே வாழ்கிறேன். கலைஞனுக்கு மகளாய்ப் பிறந்தாலும், கலைவழியாகவாவது வாழ முடிவதை எண்ணி மகிழ்கிறேன்.

கலை : நடனத்தின் கற்பனையை எங்கே கற்றுக்கொள்கிறாய் ? ஆசிரியரின் போதனையிலா ?

மகள் : இல்லையப்பா, பல கோவில்களுக்கு ஆசிரியர் அழைத்துச் சென்று, அங்குள்ள சிற்பங்களின் பாவத்தை வைத்தேதான் சாகித்யம் செய்கிறார். கல்லிலே வடித்த சிற்பிக்கு என் வணக்கம்.

கலை : (திடுக்கிட்டு) கல்லில் வடித்த சிற்பிக்கு என் மகளின் நன்றி, தந்தை பழிவாங்கும் பாதகன்.

மகள் : என்னப்பா, பழிவாங்குவதா ?

கலை : இல்லையம்மா, கலையைப் பழிவாங்கி, அதன் கருத்தைச் சீரழித்து வாழும் கயவர்களைப்பற்றிச் சொன்ன வார்த்தை.

மகள் : தந்தையே, தங்கள் முகம் சரியாக இல்லை. என்றுமுள்ள தெய்வீகக் கலை மறைந்துவிட்டது. பொறாமையின் எதிரொலி, வஞ்சக வடிவமாகக் கண்களில் தாண்டவமாடுகிறது.

கலை : தந்தையை மிஞ்சிவிட்டாய். மோன நிலையிலுள்ள ஞானி போன்ற சிற்பிகளின் பத்தினித் தெய்வம் தான் அவர்களடித்த சிலைகள். அந்த வர்க்கத்தையே அழிக்கும் பொறாமை உருத்திரர்களைப் பற்றிக் கற்பனை செய்தேன். அதனால் முகபாவம் அப்படி அமைந்துவிட்டது.

மகள் : குற்றத்தை மறைக்கும் குற்றவாளி தன்னை நல்ல மனிதனைப் பிறர் எண்ணச் சமாளிப்பதுபோலிருக்கிறது. நல்லது நான் வருகிறேனப்பா என்று

சொல்லிவிட்டு உள்ளே படுக்கச் சென்றுவிட்டாள். கலைஞனுக்கு மேலும் திகில் பற்றிக்கொண்டது. அதிலிருந்தும் தன்னைச் சமாளித்துக்கொண்டான். சிற்பியை ஆதரிக்கும் நாகஸ்வர வித்துவானிடமுள்ள பெருமை. சிற்பியைக் கெடுப்பதா? கெடுக்காமலிருந்தால், மேலும் இருவருக்குமல்லவா புகழோங்கிவிடும். எவ்வகையிலும் சிற்பியின் கட்டைவிரலை வெட்டிவிட ஏற்பாடு செய்ய வேண்டியதுதானென்று முடிவு செய்து உறங்கினான்.

நாகஸ்வர வித்துவான் வீட்டில் சிற்பி தனக்கு உறக்கம் வராமலிருந்ததால், எழுந்து உட்கார்ந்து வித்துவானைப்பாடச்சொல்லி, தான்தாளவாத்தியம் வாசிக்கிறான். இருவரும் கலையிடம் ஈடுபட்ட காரணத்தால் விடிந்தது தெரியாமலேயே கச்சேரி செய்கிறார்கள், உறங்கியவர்களெல்லாம் எழுந்து, இவர்களிருவரின் திறமையைக் கண்டு வியக்கிறார்கள்.

உணர்வு பெற்றவுடன் நாகஸ்வர வித்துவான் சிற்பியைப் பார்த்து, '' தங்களுக்குத் தாளஞானம் எங்கிருந்து கிடைத்தது? ''

சிற்பி: எங்களின் கலையே லயத்தின் மயமானது. நாதத்தைச் சிலையில் வைத்து, லயத்தை சிற்றுளியின் அடியில் வைத்துப்பழகினால்தான் உயிரான சிலை தோன்றும்

வித் : தோன்றினாலும் இவ்வளவு பக்குவமாக அமைவது கடினம்.

சிற்பி ; நாங்கள் அமைக்கும் கோவில்களே நாதமயமான ஆண்டவனை, லயத்துடன் இணைத்த கற்களைக் கொண்டு சித்திரமாகவே அமைத்து மக்களின் இதயத்தில் பதியவைக்கிறோம். ஆதி தாளம்தான் எட்டுதிக்குப் பாலகர்கள். சுற்றி வரும்போது நாதத்தோடு இதயம் இணையவேண்டு மென்று ஓசைக் கற்களை அமைத்து வைத்திருக்கிறோம். ஆண்டவனிருக்குமிடத்தில் எந்தச் சத்தமும் எதிரொலியாக யிருக்காது. காரணம், வாழ்க்கைக்காகச் சுற்றிச்சத்தமிட்டுத் திரிந்தாலும், அடங்கும்போதாவது கொஞ்சம் நிம்மதியாக வாழ மனிதன் கற்றுக் கொள்ள வேண்டுமென்ற எண்ணத்தில் செய்தது.

வித் : கோவில் கட்ட ஆரம்பித்தவனே முடிக்கும்வரையில் உயிருடன் வாழமுடியுமா ?

சிற்பி : நல்ல கேள்வி. உளபலங்கொண்ட சிற்பிகள் கோவிலுக்கு அடிப்படை போடும்போதே, தன் பரம்பரையில் தோன்றும் ஒருவன் முடிப்பானென்ற தோற்றம் ஏற்படும். சில சிற்பிகள் தன் ஆயுள் முடிவதற்குள் கோவிலைக் கட்டியும் முடித்துவிடுவார்கள்.

வித் : நாதமுள்ள கற்களை அமைத்துக்கோவிலைக் கட்டிய பிறகு, நாகஸ்வர இசையையும் ஏன் வைக்க வேண்டும் ?

சிற்பி : கல்லினுல்மட்டும் நாதம் உண்டாவதில்லை. மரத்தி லும் நாதமுண்டு. ஆனுல் அதில் துவாரம் போட்ட பிறகுதான் நாதமுண்டாகும். அதுபோல் மரம் போன்ற மனித உலகத்தில், அருள் துவாரத்தைப் போட்டு, நம்பிக்கையென்ற தக்கையை வைத்தால் தெய்வீக உணர்ச்சி உண்டாகுமென்றுதான் நாக ஸ்வர வாத்தியத்தைக் கோயிலில் வைத்தார்கள்.

வித் : அப்படியிருக்க மணி எதற்கு?

சிற்பி : காலத்தோடு மக்கள் இறைவனைப் பணிய. தான் எதிர்பாராமல் செய்யப்போகும் காரியத்தைப் பேசும்போது மணியடித்தால் நல்லதென்ற நம்பிக் கையை உண்டாக்கவேயாகும்,

வித் : சிலையைச் செய்யும்போது, சிலை கடவுளாகிறதா ? சிற்பி கடவுளாகிருனு ? சிந்தனை தெய்வமா கிறதா ?

சிற்பி : தாங்கள் வாசிக்கும்போது, வாசிப்பது கடவுளா கிறதா ? நீங்கள் கடவுளாகிறீர்களா ? நாகஸ்வரம் கடவுளாகிறதா ?

வித் : வாசிப்பதும், குருநாதனின் ஆசியும்தான் கடவுளா கிறது.

சிற்பி : அதுபோல சிந்தனையும், திறமையும், கடவுள் நம்பிக்கையும்தான் கடவுளாக மாறுகிறது.

வித் ; இவ்வளவு தெரிந்த நீங்கள் முருகனை ஏன் சிலை யாகச் செய்ய ஒப்புக்கொண்டீர்கள்.

சிற்பி : அவன் அழகுத் தெய்வம். ஆற்றல் தெய்வம், சீர்திருத்தவாதிகளுக்குப் பகுத்தறிவுத் தெய்வம். ராக, பாவ, ஆலாபனங்களுக்கு நாத தெய்வம். சீரழிந்தவனைச் சீராக்கும் தெய்வம். தியாகத்தைச் செய்யும் தியாகிகளுக்கு சுதந்திர தெய்வம்.

வித் : ஆறும், ஆறுமுகங்களாக உங்களுக்கு தெரிகிறதா? எதற்கு அவசியமில்லாமல் ஐந்து முகங்கள்.

சிற்பி : நாகஸ்வரம் ஊதும்போது ஒத்து எதற்கு ?

வித் : சுதியின் நிலை தெரிந்துகொள்ள ?

சிற்பி : தவுல் எதற்கு ?

வித் : தாளத்தின் அளவை விவரித்துக்காட்ட.

சிற்பி : வாசிக்கும்போது தாளம் போடுவது எதற்கு ?

வித் : தவுல் வாசிப்பவரும், நானும் உணர்வுடன் வாசிக்கவேயாகும்.

சிற்பி : இந்த ஐந்தும் நீர் ஒருவர் நல்ல பெயர் வாங்கத் தானே.

வித் : ஆம். சந்தேகமென்ன ?

சிற்பி : அதுபோல்தான், பஞ்ச பூதங்களான ஐந்து அறிவும், ஆருவதாகிய பகுத்தறிவுடன் கலந்தால்தான் நல்ல மனிதனாக வாழ்ந்து, அழகு பெறு தமிழை, அழகுடன் அனுபவிக்க இயலுமென்ற கொள்கை தான் அதில் அடங்கியுள்ளது.

வித்: சிற்பியே, சோதனையில் வெற்றியடைந்துவிட்டீர். தங்களின் நட்பு எனக்குக் கிடைத்தது நான் செய்த பேறுதான்.

சிற்பி: நீங்கள் செய்த பேறு என்று சொல்லாதீர்கள். கர்வத்தின் எதிரொலி அது. கலை செய்த பாக்கியம் நம்மிருவரையும் சேர்த்து வைத்தது.

வித்: உண்மையான செய்தி தான். ஆணவத்தால் கலையின் கருத்தையே மாற்றிவிடுகிறார்கள்.

சிற்பி: அவர்கள் நினைத்தாலும் கலை மாறுவதில்லை. அலங்காரத்திற்குத்தான் கர்வம் உதவுமே தவிர, உண்மைக்கு உதவுவதில்லை. ஆனதால் தன்னல மற்றவனிடமுள்ள கலைதான் உயிர் பெறும்.

வித்: கலைஞரே, உங்கள் வேலைக்கு என்ன பரிசு கிடைத்தால் மகிழ்வீர் ?

சிற்பி: அவர்கள் பரிசு தருவார்களோ அல்லது என்னிடம் ஏதாவது கேட்பார்களோ ?

வித்: உங்களிடம் என்ன கேட்கமுடியும் ?

சிற்பி: என் கலைக்கு கண்ணையே கேட்டுவிட்டால்......

வித்: புரியவில்லையே.

சிற்பி: சிற்பம் அழகாயமைந்ததற்காக நீர் என்ன தியாகம் செய்கிறீரெனக் கேட்டால்?

வித்: அழகுக்காக தியாகம் செய்யச் சொல்வார்களா ?

சிற்பி : உலகமே அழகைக் காரணமாகக்கொண்ட இயற்கைக்குச் செயற்கையோடு இணைக்கச் செய்யும் தியாக வடிவம் தானே. அதனால் என்னையே காணிக்கையாகக் கூட கேட்கலாம்.

வித் : இருக்கட்டும். இன்று நானும் தங்களுடன் வருகிறேன் என்று சொல்லி இருவரும் வெளியில் சென்றார்கள்.

அன்று சிற்பிக்குப் பரிசு என்ன தரப்போகிறார்களென்பதை அறிய ஆவலுள்ளவர்களாயிருந்தார்கள் அவ்வூர் மக்கள். தர்மகர்த்தாவும் எதைப் பரிசாகத் தரலாமென்ற யோசனையில் ஆழ்ந்திருந்தார். அவ்வூர் கலைஞன் வந்து சேர்ந்தான். தர்மகர்த்தாவின் ஆழ்ந்த சிந்தனையைக் கலைத்து, கலைஞனின் எண்ணத்தைத் தெரிவிக்கச் சந்தர்ப்பத்தை எதிர்நோக்கியிருந்தான். தர்மகர்த்தாவும் கலைஞனைப் பார்த்தவுடன் மகிழ்ச்சி கொண்டவராய் கலைஞரே ! யோசித்துவிட்டீரா ?

கலை : யோசித்துவிட்டேன். சிற்பியின் சிந்தனைக்குத் தகுந்த பரிசு.

தர்ம : பரிசு உயர்ந்ததா ? எவ்வகையில் தீர்மானித்தீர் ?

கலை : இனி வேறுநாட்டில் சிலை அடிக்க முடியாமலேயே செய்துவிட தீர்மானித்து விட்டேன்.

தர்ம : உயிரையே மாய்த்துவிட யோசனையா ?

கலை : உயிர் போய்விட்டால் அவன் செய்த சிலைக்குத் தெய்வீகமில்லாமல் போய்விடும்.

தர்ம : நீர் சொல்வது விளங்கவில்லையே,

கலை : சிலை செய்தவன் அதை நிலைநாட்டுமுன் உயிர் விட்டால் அந்தச் சிலைக்கும் உயிர்போன மாதிரி தான். அதனால் சிலை அடிக்கமுடியாமல் செய்ய ஒரு யோசனை செய்திருக்கிறேன்.

தர்ம : இங்கேயே சிற்பியைத் தங்கவைத்து விடலா மென்று?

கலை : இல்லை, அங்கக்குறைவு ஏற்படுத்திவிட்டால்.

தர்ம : வஞ்சனை. அது ஒருக்காலும் முடியாது.

கலை : அங்கக்குறைவு என்றால் கால், கையை அல்ல. இடது கையின் கட்டை விரலைத் தானமாகக் கேட்டு வாங்கிக்கொள்வது.

தர்ம : இதுவும் சங்கடமான காரிய மாயிற்றே. எவ் வாறு அவனைக் கேட்பது?

கலை : அழகான சிலையின் தெய்வம் இரவில் கனவில் வந்து கட்டை விரலைச் சிற்பி தானம் செய்தால் தான் சிலையைக்கோவிலுக்குள் வைக்கலாமென்று சொன்னதாகச் சொல்லுங்கள்.

தர்ம : நல்ல யோசனை. இனி எந்த ஊரிலும் முருக உருவமே இல்லாமற் போய்விடும். நம் கோவில்

சிலையே உலகமெங்கும் புகழோங்குமென்று சொல்லி மகிழ்ச்சியோடிருந்தார்.

சிற்பியும் வித்துவானும் வந்து சேர்ந்தார்கள். வித்துவான் கோவிலதிபரிடம் இன்று முருக நிறுவனம் நடத்தி விடலாமல்லவா ? எனக் கேட்டார்.

தர்மகர்த்தா : உடனே பதில் சொல்லாமல் கலைஞனைப் பார்த்தார். கலைஞனும் வந்தனத்துடன் சிற்பியைப் பார்த்தான். இருவரின் பார்வையில் இருந்து ஏதோ சொல்லமுடியாத ஒன்றை மனத்திற்குள் வைத்துக்கொண்டு திண்டாடுகிறார்களென்பதைச் சிற்பி உணர்ந்தான். அவனையே கேட்டுவிடுவதென்ற முடிவுக்கு வந்தான்.

சிற்பி : தர்மகர்த்தாவே, தாங்களின் மனதிலுள்ளதைத் தெளிவாகச் சொல்லுங்கள். தயக்கம் வரத் தேவையில்லை. கலையில்தான் என் கற்பனையே தவிர, உலக விவகாரங்களைப் பற்றி எனக்குத் தெரியாது.

கலை : உண்மையான பேச்சு. உள்ளத்திலுள்ளதை சொல்ல முடியாத நிலை.

வித் : அவ்வளவு கொடுமையான கருமமா ?

கலை : ஆம், ஒரு கலைஞனை வாழ்த்துதற்குப் பதிலாக துன்பத்திற்குள்ளாக்கும் நிகழ்ச்சி.

சிற்பி : துன்ப நிலை ! எதுவாயிருந்தாலும் சொல்லுங்கள். அதைப்பற்றி கொஞ்சங்கூடக் கவலை கிடையாது.

தர்ம : உன் முருகனைக் கோவிலுக்குள் நிர்மாணிப்பதென்றால், ஒரு உடன்பாட்டின் பேரில் நிர்மாணிக்க வேண்டியிருக்கிறது. அதுவும் என் எண்ணமல்ல, கனவில் முருகனே வந்து சொன்னார்.

சிற்பி : முருகன் வந்து என்ன சொன்னார். விவரமாகச் சொல்லுங்கள்.

தர்ம : உன் இடது கை கட்டை விரலைத் தானமாகக் கொடுத்தால்தான், நீ அடித்த சிலைக்கு உயிருண்டாம்.

சிற்பி : (சிரித்துக்கொண்டே) கலைத் தெய்வமே, இதுவும் உன் திருவிளையாடலா ? நான் கலையால் வாழ்வது உனக்கு விருப்பமில்லையா ?

வித் : சிற்பியே, என்ன யோசனை.

சிற்பி : ஒன்றும் யோசனையில்லை. கலைக்கும் ஞானமிருக்கிறதென்ற முடிவிற்கு வந்தேன். ஆனால் கலையை ஏற்றுக்கொள்ளும் அளவுக்குக் கருணையில்லா ஞானமிருக்கின்றதே என்ற ஏக்கம் வந்துவிட்டது.

தர்ம : சிற்பியே, என்மீது வருத்தப்படவேண்டாம். கடவுள் கனவில் சொன்னதைத்தான் சொன்னேன்.

சிற்பி : உங்கள் மீது எனக்கு வருத்தம் வரவேண்டியது அவசியமேயில்லை. என் உள்ளத்தில் இதுவரை வளர்ந்து உருவாகிய கலைத் தெய்வத்தின் காலடியில் என்னையே பலி கேட்டாலும் கலங்க மாட்டேன். அழகுக் கடவுளுக்குள்ள செருக்கை நினைத்து நானே சிரிக்கிறேன். செருக்கிற்குப் பலி என் கட்டை விரல். கட்டை விரலைக் கொடுத்தால்தான் நாட்டைத் தெய்வீகமாக்க முடியுமென்ற முடிவு அந்தக் கடவுளுக்கேயிருக்கும் போது நான் என்ன செய்யமுடியும். இசை ஞானியே! நான் காலையில் சொல்லவில்லையா காணிக்கை நான்தான் தரவேண்டுமென்று. அது உண்மையாயிற்று முருகா! சுடுகாட்டில் ஆடியவருக்கு பிறந்த மகனல்லவா நீ! அதனால் அழகு ஒன்றுமில்லாது போகுமுன், செருக்கு மறையுமுன் உள்ளத்திலுள்ள காதலும், கலை அறிவும், மாறுத நிலை ஏற்படுமுன் உன்னைச் சுடுகாடாக மாற்றிக்கொள்ளென்பதை எனக்கு சொல்லிக் கொடுக்கிறாயா? கலைஞர்களே சுடுகாட்டைப் போன்றவர்கள். தன்மையற்ற சமுதாயவாதிகள். உனக்கு ஆறுதலை இருப்பதுபோல், எங்கள் இனத்தவர்களுக்கெல்லாம் ஆறுதலையளிப்பது கலைதானென்ற முடிவிலுள்ளவர்கள். உங்கள் அப்பன் மயானத்தில்தான் ஆடினான். அதனால்தான் நிதானமுள்ள நிலை ஏற்படும் கோவில்களில் நடனமாடும் சிற்பங்களாகவே வைத்திருக்கிறோம். உணர்ச்சியிழந்தவன், சொத்துரிமையைப்

பற்றி விளம்பரம் செய்துகொள்ள பிரியமுள்ளவன். அழகைக்காண்பித்து வாழ்க்கை நாடகத்தை ஆரம்பிப்பவன், இத்தனை பேரும் கோவிலுக்கு வந்தாலும், தாளமாகிய கலாச்சாரத்தோடு, மனித உள்ளங்களில் கற்பைச் சாகித்தியமாக்கி நடனமாடினால்தான் நிதானமாய் வாழமுடியுமென்ற முடிவில்தான் கடவுள்களையெல்லாம் நடனமாடும் நிலையில் காண்பித்திருக்கிறோம். முருகா! கட்டை விரலை மட்டும் கேட்டாயா? அதுவே போதும். நானே தருகிறேன்-ஆனால் நீ இனி எப்படி நமக்குப் பணியாற்றுவானென்று எண்ணலாம். என் கட்டைவிரலைத்தான் கேட்கமுடியுமே தவிர, என் உள்ளத்திலிருக்கும் கலையை அழிக்க முடியாது. தர்மகர்த்தா! நான் தயாராய் விட்டேன். சிலைக்கு கட்டை விரலோடு என் இரத்தத்தையும் அதன் கண்களிலேயே விடுகிறேன்.

வித்: சிற்பியே, கட்டை விரலைக் கொடுத்து நாம் அடுத்த சிலையை அமைக்க வேண்டாமென்று சொல்லிவிடு.

சிற்பி: இசையின் நாதம் மூலாதாரத்திலிருந்து வரும்போது தன்னைத் தியாகம் செய்துகொள்ளக் கற்றுக் கொள்ளவேண்டுமென்று பேசிக்கொண்டிருக்கும்போது, கலைஞனின் மகள் வந்துசேருகிறாள். வந்தவுடன் அங்குள்ள நிலையைத் தன் தந்தையால் தெரிந்துகொள்கிறாள். சிற்பியின்

முகத்தைப் பார்த்தவுடன் அவன் தெய்வீக உள்ளத்தின் எதிரொலி முகத்தில் விளங்குவதைப் பார்க்கிருள்.சிற்பி வித்துவானிடம் இந்தப் பெண் யாரென்று கேட்கிருன். வித்துவானும் கலைஞனின் மகளென்று தெரிவிக்கிருன். தர்மகர்த்தாவும் என்ன செய்வதென்று புரியாமலிருக்கிருர். சிற்பி சிலையிடம் ஓடினன். முருகனை மனமார வாழ்த்தினன். தன் கட்டை விரலைச் சுத்தியா லடித்துக்கொள்ள ஓங்கும்போது, கலைஞனின் மகள் ஓடித் தடுக்கிருள்

சிற்பி : பெண்ணே, நீ ஏன் தடுக்கிருய்? என் சிலைக்கு உயிர் கொடுக்க என் அங்கமே உதவுவதற்காக மகிச்சியடைகிறேன். காரணமில்லாமல் நீ ஏன் தடுக்கிருய் ?

பெண் : ஐயா, சிலையின் அமைப்பிற்காக இத்தனை பெரிய தியாகமா ? தங்கள் கட்டை விரலை இழந்து விட்டால் கலை உலகம் இறந்துவிடாதா ?

சிற்பி : அழகான வாதம். உண்மையில் கலை உலகம் இறவாது. என்னைப் போன்ற ஒருவனுல்தான் கலை வாழமுடியு மென்ருல் அந்தக் கலைக்கு திறமை கிடையாது என்றுதான்பொருள் ஆனதால் தடுக்க வேண்டாமென்று சொல்லித் தன் கட்டை விரலை வெட்டி இரத்தத்தைச் சிலையின்மீது விட்டுவிட்டு மயங்கிக் கீழேவிழுந்தான். விழும்போது கலைஞ னின் மகள்தாங்கி மயக்கத்தைத் தெளிவித்தாள்.

தெளிவித்தவுடன், தன் சிற்றுளி வைத்திருக்கும் பையில் பச்சிலையிருப்பதாகச் சொல்லி, அதை எடுத்துவந்து கையில் வைத்துக் கட்டச் சொல்கிறான். பச்சிலையை வைத்துக் கட்டிய பிறகு சிலையும் பிரதிஷ்டை செய்யப்படுகிறது.

கலைஞனின் மகள் சிற்பியை விட்டுப் பிரியாமல் வித்துவான் வீட்டிலேயே தங்கிவிடுகிறாள். வித்துவான் இந் நிகழ்ச்சியால் மனமுடைந்து வாடுகிறார். மறுநாள் சிற்பி தன் கை சரியாகி விடுமென வித்துவானிடம் சொன்ன போதிலும் அவர் மனம் சரியாக வில்லை. கலைஞனின் மகள்வந்து சிற்பியிடம் "காயம் எப்படியிருக்கிறது வலி யில்லையா" என்றாள்.

சிற்பி : கட்டிய பச்சிலை ஒரு சிறந்த பச்சிலை. கற்களில் பூசினால் துவாரமாக்கிவிடும். உடலில் பட்டால் அறுந்த சதை ஒட்டிக்கொண்டு காயமாறிவிடும்.

மகள் : பச்சிலைக்கும் எத்தனை திறமையிருக்கிறது. ஆனால் அதைத் தேடிப் பிடிக்கவேண்டும்.

சிற்பி : தேடிப் பிடிப்பதால்தான், வாயில்லா நிலைமையிலிருக்கிறது. வாயிருந்து பேசும் திறமையிருந்தால், அவைகளுக்கும் விசித்திரம் தோன்றிவிடும்.

மகள் : உங்களிடம் நான் ஒன்று சொல்ல விரும்புகின்றேன். அதைக் கேட்பீர்களா ?

சிற்பி : என்ன சொல்லவேண்டுமென்றாலும் என்னிடம் சொல்லலாம்.

மகள் ; உங்களின் சிற்பத்தில் நடனபாவத்தை அமைத்தே செய்யும்போது, உங்களுக்கு வாழ்க்கையைப் பற்றி நினைவு வராதோ !

சிற்பி ; வாழ்க்கையே கலை வடிவமாக்கி, கோவில் கட்டுவ தால் அதன் அழகுதான் நாங்கள் விரும்பும் வாழ்க்கையின் குறிக்கோள்.

மகள் : கலையழகை விரும்பியதால்தான், உடலங்கத்தின் பெருமை தெரியாமல் தியாகம் செய்துவிட்டீர்கள்.

சிற்பி : உடலங்கத்தை விட, உள்ளத்தை நம்புபவர்கள் தான் கலைஞர்கள், அடித்த சிலையே தானம் கேட் கும் போது என்ன செய்வது ?

மகள் : கனவை நம்புகிறீர்களா ?

சிற்பி ; நினைவுதான் கனவென்பது தெரியும் ? ஆதரிக்கும் தலைவனின் எண்ணத்தைப் பூர்த்தி செய்யவேண்டு மென்ற முடிவுதான். மகளே, ஏனிந்தக் கவலை.

மகள் : நடனமாடிய உள்ளத்தில் தோன்றிய சந்தேகம் அதைத் தெளிவாக்கிக் கொண்டேன்,

சிற்பி : மிக்க நன்றி. கலையோடு கருத்திருக்கிறது.

மகள் : நான் வருகிறேன் வணக்கம். என்று சொல்லி விட்டு வெளியே சென்றாள்.

சிற்பி, நாகஸ்வர வித்துவானிடம் தான் சிக்கலைவிட்டுப் புறப்பட நினைப்பதாகவும், தனக்கு மன நிறைவு யில்லையென்றும், தான் வேறு ஊருக்குச் சென்றால் கொஞ்சமாவது நிம்மதியிருக்குமென்றும் தெரிவித்தான். நாகஸ்வர வித்துவானும் சம்மதித்து, இருவரும் கோவிலுக்குச் சென்று, கடைசி முறையாகச் சிங்கார வடிவேலனைப் பார்த்துவிட்டுப் போவதென முடிவு செய்தார்கள்.

சிற்றுளிப் பையையும், வெற்றிலைப் பெட்டியையும் எடுத்துக்கொண்டான், நாகஸ்வர வித்துவான் தன் ஞாபகமாகயிருக்க சிறு நாகஸ்வரம் ஒன்றைக் கொடுத்தார். அதையும் வாங்கிக்கொண்டு புறப்பட்டான், தான் தங்கியிருந்த இடத்தைத் தொட்டு வணங்கினான். காரணம் என்னவென நாகஸ்வர வித்துவான் கேட்க "நட்புரிமையைப் பெற்ற இடம். பிரிந்தாலும் அன்பு மறவாமலிருக்க வேண்டும், அதற்காக வணங்கிக் கொண்டேன்" எனப் பதில் சொல்லிவிட்டு, கோவிலுக்குச் சென்றார்கள். கோவிலையடைந்தவுடன் தர்மகர்த்தா வருத்தத்துடன் வரவேற்றார். சிற்பி எவ்விதமானக் கவலையில்லாமல் மகிழ்ச்சியாகவிருப்பதைக் கண்டு வியப்புற்றார். சிற்பி தர்மகர்த்தாவை வணங்கிவிட்டு, வடிவேலன் சன்னதிக்குச் சென்றான். முருகனைப் பார்த்தவுடன் கண்களில் நீர் வழிந்தது. தூண்டா விளக்கு அசைந்தாடிற்று. அசைந்து உத்தரவு தந்துவிட்டதாக எண்ணினான். முருகனை நோக்கி கண்ணீர் மல்கிப் பேசுகிறான்.

"முருகா அழகனாக உன்னைச் செய்தேன். என்னை அழகில்லாமல் செய்துவிட்டாய். வடிவுள்ளயிடத்தில்

வீரமிருக்க வேண்டுமென வேலையும் ஆயுதமாகத் தந்தேன். என் கலை ஆயுதமானக் கட்டைவிரலை, வேலுக்காக வாங்கிக் கொண்டாய். நீ அழகுப்பற்றுள்ளவன். நான் கலை உலகப் பித்தன். நீ அழகன், நான் சீரழிந்து விட்டேன். முருகா! பேசாமலிருக்கிறாய். நான் திட்டி விட்டேனென்ற வருத்தமா? உரிமையில் பேசிவிட்டேன். உரிமையா? உன்னைக் கோவிலில் வைத்த பிறகு உரிமை தான் போய்விட்டது. போய்விடவில்லை. உரிமையின் வடிவம்தானே உன்னுருவம்.

உரிமையை உன்னிடமிருந்து வாங்கிக்கொண்டு வேற்றூருக்குப் போகிறேன். அங்கமிழந்தவனாயிருந்தாலும், உன்னை மீண்டும் உருவாக்க வாய்ப்பு ஏற்படுமானால் செய்வதற்கு வரந்தர வேண்டும். இதுதான் என் வேண்டுதல்'' என உருக்கமாக வணக்கம் செய்துவிட்டுப் புறப்பட்டான். நாகஸ்வர வித்துவானிடம் பிரியா விடை பெற்றுப் புறப்படும் சமயம், கலைஞனின் மகள் கட்டுச் சோற்று மூட்டை ஒன்றைக் கொடுத்து. ''என் பரிசு ஞாபகமிருக்கட்டும்'' எனச் சொல்லிவிட்டுச் சென்றாள்.

# எட்டுக்குடி.

சிற்பி, சிக்கலை விட்டுப் புறப்பட்டு, மேற்கு நோக்கி நடந்தான். வழி நெடுக சிக்கலின் நிகழ்ச்சிகளை சிந்தனை செய்துகொண்டே சென்றான். சிங்கார வடிவேலனை உருவாக்கிய பெருமையை நினைக்கும்போது, தன் உறுப்புக்குறை பற்றிக்கூடக் கவலைப்படவில்லை. இறுதியாகக் கலைஞனின் மகள் சோறு கொண்டுவந்து கொடுத்ததைப் பற்றிச் சிந்தித்தான், நாகஸ்வர வித்துவான் தந்த பரிசையும், அன்பையும் பற்றித் தனக்குள்ளாகவே மகிழ்ச்சி கூர்ந்து பெருமை கொண்டான்.

வழி நடந்த களைப்பினால் அருகிருந்த வாவிக்கரையில் அமர்ந்தான். கரையிலுள்ள அரச மரத்தையும், அதிலுள்ள பிள்ளையாரையும் நோக்கினான். அவன் சிந்தனை பறந்தது. அரசாண்டவர்கள் உயர்ந்திருந்தாலும், அடிப்படை (மூலாதாரம்) வலிமையிருக்க வேண்டிதான். அரசமரத்தடியில் பிள்ளையாரை நிலைக்க வைத்தனர் போலுமென எண்ணிச் சிரித்தான். வாழ்க்கையில் தனக்கு ஏற்பட்ட நிகழ்ச்சிகளை ஒப்பிட்டுப் பார்க்கும் போது, பிள்ளையாரை மரத்தடிக்குத் தக்க கடவுளென நினைத்தான்.

தம்பி முருகனோ வஞ்சக எண்ணம் கொண்டவன். அழகுக்கு அழகு செய்ய நினைக்கும் கலைஞனை பழி வாங்குபவன். அவனைக் குளக்கரையில் வைத்தால், நீராட வருபவர்களையும் சோதனை செய்வான். சோதனை செய்வதோடு மட்டுமல்லாமல், வாழ்க்கைத் துணைவியோடு

வாழ்பவனிடமும், தன் திறமையைக் காண்பித்து வேதனை தருவான். இரு மனைவிகளின் மாண்பினைக் காணத் தூண்டுவான். திருமணமாகாதவர்கள் வந்து மூழ்கினால் அவர்களைக் குற்றவாளியாக்கிக் காட்டுவான். இந்தத் துன்பங்களெல்லா மில்லாமலிருக்கத்தான், பிள்ளையாரை குளக்கரை அரசமரத்தடியில் காவலாய் வைத்தார்கள்.

யானை, விளாம்பழத்தைச் சாப்பிட்டால், விளாம் பழத்தினுள்ளிருப்பதை உறிஞ்சிவிட்டு, வெறு ஓட்டை வெளியே போட்டுவிடும். நல்லவர்களும், கெட்டவர் களும் குளத்தங்கரைக்கு வந்து போவதால், நன்மையும், தீமையும் ஏற்படலாம். அதனால், வெளியுலகத்தில் எவ்வளவு தீமையிருந்தாலும், உள்ளுலகத்திலுள்ள அரு ளால் தீமையைக் களைந்து, நல்லவர்களாக்க இயலு மென்ற நம்பிக்கையில்தான் யானைத்தலையுள்ள முதல்வனை அங்கே வைத்தான் போலிருக்கிறது.

நீர் நிலையிலுள்ள இடத்தில் அரசமரத்தை ஏன் வைத்திருக்கவேண்டும். உடலழுக்கைப் போக்கித் தூய்மையுடன் வெளிவரும்போது, தாழ்மை யா ன எண்ணங்களிருந்தாலும், அரசமரத்தின் இயல்பைப் போல், மக்களுக்கு நன்மைதரும் நிழலாக இருந்து வாழக் கற்றுக்கொள் என்று அறிவிக்கிறது. அங்கிருக்கும் பிள்ளையாருக்கு மூஞ்சூறு தான் வாகனம். உலகில் எங்கும் உயிர்க்கு மூலமாக நின்று உதவுவது காற்று. அக்காற்றைப் பிராணவாயு என்பர். அக்காற்று உலகில் ஒரு சிறிது நின்றுவிடுமானால் உயிர்களனைத்தும் இறந்து

விடும். அப்போது கடைசியாக இறக்கும் இயல்பை யுடையது பிள்ளையார் வாகனம் ஒன்றேதான். அதனையே தன் ஊர்தியாகப் பிள்ளையார் கொண்டார். தானே முடிக்கும் முதலாக நிற்கும் முதல்வன் என்பதை உலகறிந்து வாழ்வதற்காக, தமிழகத்தின் வைத்த ஒவ்வொரு சின்னங்களும், அறிவுரைப் புத்தகங்களாகவேயிருப்பதை எண்ணி மகிழ்கிருன்.

பசியையும் மறந்து இத்தகு சிந்தனையிலாழ்ந்திருந்தான் சிற்பி. சிந்தனை கலைந்தது. அந்த நிலையிலேயே பசி அவனைப் பற்றத்தொடங்கியது. உடனே, கட்டுச் சோற்று மூட்டையை அவிழ்த்தான். அவிழ்த்ததும், அதன்மீது ஒரு கடிதமிருந்தது. அதனைப் பிரித்துப் படிக்கத் தொடங்கினுன்.

**கலையால் உயர்ந்த சிற்பி அவர்களே!**

கலை வணக்கம் பல. மனமில்லாக் கலைஞனுக்கு மகளாய்ப் பிறந்தேன். அடிவானத்தில் உலகம் உவப்பத் தோன்றும் பலர் புகழ் ஞாயிற்றைப் பார்த்துப் பார்த்து, இதை ஒத்ததுதான் கலையென எண்ணிக் காலங்கழித்தேன். இசையைக் கற்று இன்புற எண்ணினேன். ஆனுல் வாட்டந்தீற நாட்டியமே பயின்றேன்.

தந்தை, ஆம்; உங்கள் உறுப்புக்குறைவிற்கு உரிய முதல்வர். அவர் செய்த சதியின் எதிரொலி, உங்களின் விதியாக மாறியது. என் தந்தை கலைமீது கொண்ட

பொருமை, உங்கள் வாழ்வின் நிலையையே மாற்றி விடுமோ என அஞ்சுகிறேன்,

தந்தைக்காக மகள் மன்ருடுகிறேன். மன்னிப்புக் காக அல்ல, தந்தையின் வஞ்சகத்திற்குப் பலி. என் நடனக் கலையாக மாறிவிடக்கூடாதென்பதற்காக. அதைப் பற்றி சிந்தித்தேன். ''பசி வந்திடப் பத்தும் பறந்துபோம்'' என்பது என் நினைவிற்கு வந்தது. வெறுப்பு இருந் தாலும், உணவு உடலுக்குள் செல்லுமாளுல் சற்று அமைதி பிறக்குமென எண்ணியே இச்கட்டுச் சோற்றைக் கட்டிக்கொடுத்தேன். பிழையாயின் மன் னிக்கவும். கலை சார்பில் தங்கள் வாழ்த்தை மகளென்ற உறவில், அகம் குளிரத் தருவீர்களென நம்பியே இக் கடிதம் எழுதினேன்.

இங்ஙனம்

**தந்தையின் தீவினையைப் போக்க எண்ணிய மகள்.**

சிக்கலில் உள்ள கலைஞனின் மகள் எழுதிய கடிதந் தான் இது. கடிதத்தைத் திரும்பத் திரும்பப் படித்தான். தாஞகவே சிரித்தான். கலைஞனுக்கு ஏற்பட்ட பொருமையை நினைத்து வருந்திஞன். வாழ்க்கையின் நலத்திற்காகவும், அழகைக் காதலிப்பதற்காகவும், சொத்துரிமைக்காகவும் தான் பொருமை ஏற்படும். அதஞல் பல நிகழ்ச்சிகள் உலகிடை நிகழ்ந்துள்ளன என்பதைப்பற்றிக் கேள்வியுற்றிருக்கிறேன். கலையை அழகாகச் செய்பவனைப் பார்த்து, கலைவழியாக மகிழ்ச்சி யடைய வேண்டியதிருக்க, மகிழ்வைப் பொருமையாக மாற்றவேண்டிய நிலையைப் பார்த்தால் வேடிக்கையாக யிருக்கிறது.

தமிழ்நாடே! உன் தாய்மொழியில் ஈற்றசைக்கு அர்த்தமில்லையாதலால், உன் நாட்டுக் கலையின் முடிவிற்கு, அர்த்தமில்லாத தண்டனையை விதிப்பாய் போலிருக்கிறது. கலைஞர்களுக்கும், தொடக்கத்தில் கலை ஆர்வத்தையும், முடிவில் தற்பெருமையையும் தந்து, பரிசோதனைக்களமாக்கிவிடுகிறாய். இத்தனை சோதனைகளுக்கும் தப்புவித்தக் கலைஞனிடம் தெய்வமாகப் பதிந்து, அற்புதக்கலைகளைச் செய்யத்தூண்டுகிறாய். இது உன் திருவிளையாட்டு! மகளே, என் வாழ்த்து என்றும் உன் பக்கமிருக்கும்,

உண்டபின் சற்று நேரத்தில் புறப்பட்டான். கிராமங்கள்தோறுமுள்ள கோவில்களையும், சிற்பங்களையும் பார்த்துக்கொண்டே செல்கிறான். வழியில் ஒரு குடும்பத்தில் நடக்கும் சச்சரவைக் கவனிக்கிறான், மனைவி இசைப் பித்துடையவள். கணவன் கலைச்சுவையறியாதவன். இசை ஆசிரியன்மீது ஐயப்படுகிறான். அவனால் தன் மனைவி தவறிவிட்டாளோவென்ற ஐயப்பாடு. மனைவி குற்றமற்றவளாகக் காணப்படுகிறாள். அவள் முகத்தெளிவு களங்கமற்ற நிலையைக் காண்பிக்கிறது.

சச்சரவில் சிற்பி ஈடுபடுகிறான். கணவனை அழைத்து, வருகிறான்.

சிற்பி : ஐயா, மனைவிமீது ஐயமா? அவள் கற்றுக்கொண்ட இசைமீது சந்தேகமா?

கண : இரண்டின் மீதுமல்ல. ஆசிரியர் மீதுதான் ஐயம்.
சிற்பி : உங்கள் மனைவியை நம்புகிறீர்களா!

கண : நம்பிக்கொண்டுதான் வந்தேன். ஆனால்.......

சிற்பி : நம்பிக்கையை மனைவி மீது வைக்கவில்லை, அவளின் அழகிலும், அனுபவித்த சுகத்தின் மீதும் நம்பிக்கையில்லாக் காமமாக வைத்திருந்தீர்கள், அப்படித்தானே?

கண : என்னய்யா புதிர் போடுகின்றீர்? அழகில்லாவிட்டால், அவளை நான் மணந்துகொண்டிருக்க மாட்டேன்.

சிற்பி : அழகை இசை ஆசிரியர் எடுத்துக்கொள்ள முடியாது. உடலழகைவிட உள்ளத்தினழகு நல்லதொரு நாதமாக யிருக்கவேண்டுமென்றுதான் பாடுபட்டார்.

கண : அதற்காக, என் மனைவியுடன் சிரித்துப் பாடம் சொல்லிக்கொடுக்கலாமா ?

சிற்பி : அழுதுகொண்டுசொல்லிக்கொடுக்கவேண்டுமோ? நீர்தானே ஆசிரியரை ஏற்படுத்தினீர்.

கண : நானேதான். மனைவியின் விருப்பத்திற்காக.

சிற்பி : உங்களுக்கு விருப்பமில்லையானால் அன்றே மறுத்திருக்கலாமல்லவா ?

கண : மனைவி கேட்கும்போது..............

சிற்பி : சுகத்தின் முதலதிகாரம். அதனால் ஒப்புக் கொண்டீர்போலும். நம்பிக்கையில்லாத கணவனுடன் வாழும் உங்கள் மனைவிக்கு இசைஞானம்

தேவையில்லை. கலைஞானத்தைக் கற்போடு இணைத்து, வாழ்க்கை ஞானத்தோடு வாழ்ந்தால் போதும்.

கண : அவள் பாடினால் மிகவும் அருமையாக இருக்கும்.

சிற்பி : தங்கள் மனைவியுடன் பேசலாமா ?

கண : தாராளமாகப்பேசலாம். உங்களின் பேச்சு என்னை வேறு மனிதனாக்கிவிட்டது என்று சொல்லி வீட்டிற்குள் அழைத்துச் செல்கிறான்.

உள்ளே சென்றதும் அவன் மனைவி சிற்பியை வரவேற்கிறாள். வரவேற்று உபசரித்து.

மனைவி: ஐயா, வணக்கம். தங்களின் வரவு நல்வரவாகுக.

சிற்பி : அம்மா ! கணவரின் அன்பைப்பற்றி எந்த முறையில் உறுதி செய்திருக்கிறீர் ?

மனை : அன்னத்தைப்போல் வாழக் கற்றுக்கொண்டேன். கலைஞானமுள்ளவர்போல்தான் காணப்பட்டார். தன் காம எண்ணம் தீர்ந்தபிறகு, உரிமைப் போராட்டத்திற்குத் தலைமை வகித்துவிட்டார். அதனால், உரிமையோடு போராட என் உடலை மட்டும் தியாகம் செய்துவிட்டு, உள்ளத்தைக் கலைக்கு உரிமையாக்கத் திட்டமிட்டேன் அதுவும்............

சிற்பி : வேறுபாடாக முடிந்தது. பெண்மையே ஒரு அபாயமான பாத்திரம் அம்மா. ஒரே சமயத்தில் அன்பும், அபாயமும் கலந்து விளையாடும் நிலையம். ஆண்மை பச்சோந்திநிற விளையாட்டுப்பொம்மை. சிறு பிள்ளைகள் கையிலுமிருக்கும். சந்தர்ப்பத்தில் இருக்கத் தகாத இடத்திலும் இருக்கும். எங்கிருந்தாலும் ஆண்மைக்குப் பழி கிடையாது. உனக்கு இசைக்கலை வேண்டாம்.

கண : போங்க ஐயா! விளையாட்டிற்குச் சண்டைபோட்டால்........

சிற்பி : இன்று விளையாட்டு. நாளை உங்கள் மனைவியின் வாழ்க்கைக்கே வினை.

மனை : இசைக்கலையை எப்படி மறப்பது?

சிற்பி : பைத்தியமா உனக்கு?

மனை : விளக்கமாகச் சொல்லுங்கள்.

சிற்பி : அம்மா! கணவனின் தூக்கத்திற்கு இசையைப் பயன்படுத்து. நீ கிராம வாழ்க்கையில் பழகியவள் தானே. காலையில் மாடு கறக்கும்போது பூபாளத்தைப் பாடு. பாத்திரங்களை விளக்கும்போது, அதிலுண்டாகும் நாதத்தை இசையாக்கிப் பாடு. இசையினால் தொழிலாளிகளையெல்லாம் வேலை வாங்கு. உன் கணவரும் நாளடைவில் இசைக்குக் கட்டுப்பட்டு, உனக்குப் பக்கவாத்தியம் வாசிக்க

வந்துவிடுவார். ஒன்றுமட்டும் சொல்ல விரும்புகிறேன். இசைக்கலைக்கு மதிப்புக் கொடுப்பதைவிட கணவனின் அன்புக்கு மதிப்புத் தரவேண்டும். இசையின் பெருமையால் தலைவனை இகழ்ந்த எந்தப் பெண்ணும் நிம்மதியாக வாழ்ந்ததில்லை, ஆனதால், கணவனின் குறிப்பறிந்து நடப்பதை பல்லவியாகவும், கணவனின் ஒத்துழைப்புக் கிடைத்து கம்பீரமாக வாழ்வதை அனுபல்லவியாகவும், இருவரும் நாட்டின் சமுதாய நலனுக்குச் சரணடைவதை வாழ்க்கை என எண்ணும்போது சரணமாகவும் வைத்தது இத் தமிழ்நாடு. ஞாபகமிருக்கட்டும். நான் வருகிறேன்.

கண: இன்று தங்கிப் போகலாமே?

சிற்பி: தங்கவே முடியாது. மனநிலை ஓர் நிலையாகும்வரையில் நடைதான்.

அங்கிருந்து கால்நடையாகவே புறப்பட்டு திருக்குவளை என்னும் ஊருக்கு வந்து சேருகிறான். ஆங்குள்ள கோவில் உள்சென்று காண்பன கண்டு தெற்கு நோக்கிச் செல்கிறான். சுமார் இரண்டு கல் சென்றவுடன் வழியிலே கிடந்த கல்லொன்றில் தடுக்குண்டு வீழ்கிறான். வீழ்ந்து கிடக்கும் அந்நிலையில் அக்கல்லை நோக்கி "உறுப்புக் குறைந்த என்னால் ஆறுமுகனை உருவாக்க இயலாதுஎன்று இயம்புகிறாய். இன்றே வேலையைத் தொடங்குகிறேன் பார்," என்றுகூறி உறுதிமொழி எடுத்துக் கொள்கிறான்.

1. ஒருவருக்குத் திடமாவது ஊக்கமாகிய செல்வமே.
2. மக்களுடைய உயர்வு அவர்களது ஊக்கத்தினளவே யாகும் என்ற திருக்குறள் கருத்துக்கள் அவன் முன் நிற்கின்றன.

அக்கலேயே துணையாகக் கொண்டு சிலையை உருவாக்கத் தொடங்கிவிடுகிறான். யாழ்ப்பாணத்து ஆதீனத்தைச் சேர்ந்த கோயிலாகத் திருக்குவளை விளங்கி வந்தது. ஆதீனத்தின் ஒப்பம் பெற்று ஆறுமாமுகனையே உருவாக்குகிறான். சிற்றுளியின் ஒலி திருக்குவளையையும், அந்த ஊரையும் விழிப்படையச் செய்கிறது. மூன்று நாட்கள் வரையில் கோவிலிலிருந்து பிரசாதம் கிடைத்தது. வயிற்றுக்கவலை யில்லை.

நான்காம் நாள் குறும்புச் சிரிப்புள்ள ஒரு குமரி உணவு கொண்டு வந்தாள். அவளைக் கண்டவுடன் சிற்பி ஆச்சரியப்பட்டான். முதலில் தனக்கென அது வந்துளது என நினைக்கவில்லை. பின்னருகில் வந்தபிறகு தனக்காகத்தான் உணவு வந்துளதென நினைத்தான். அந்தக் குமரியும் சிற்பியிடம் தன் தந்தை, தங்களுக்காக உணவு அனுப்பியிருப்பதாகச் சொன்னாள்.

சிற்பி: இளங்குமரியாகிய உன்னைத் தனியாகவா அனுப்பினார் உன் தந்தை.

கு: நாட்டிலுள்ளவர்கள் நல்லவர்களென்ற நம்பிக்கை என் தந்தைக்குண்டு.

---

1. "உரமொருவற்கு உள்ள வெறுக்கை," (திருக்குறள்)
2. "மாந்தர்தம் உள்ளத்தனைய துயர்வு" ,,

சிற்பி : நம்பிக்கைக்கு உரியவனாக நான் இருக்கமுடியாது என நினைக்கிறேன்.

கு : அப்படி நீங்கள் இருந்திருந்தால், தந்தையே வந்திருப்பார்.

சிற்பி : அப்படியா ! நம்பிக்கைக்கு நான் தகுதியற்றவனா?

கு : நம்பிக்கையைக் கலையிடம் வைத்தவர்களுக்குப் பார்வையில் குறும்பு ஏற்படாதென்ற நம்பிக்கை தந்தைக்கு இருந்திருக்கலாம்.

சிற்பி : உன் தந்தை?

கு : ஒரு இசைவாணர்.

சிற்பி : இசைவாணருக்கு என்மீது அன்பா? கல்லடிப்பவனிடம் கருணையா? வேடிக்கையான உலகம்.

குமரி : மிதிக்கும் கல்லை வணங்குங் கல்லாகச் செய்பவர்களிடம் ஏதாவதொன்றிருக்குமென்று எண்ணுகிறார்.

சிற்பி : ஒன்றிருக்குமென்று நம்பும் அவர் எங்கிருக்கிறார்?

குமரி : இவ்வூரில்தானிருக்கிறார். உணவை உண்ட பிறகு அவரைப் பார்க்கலாம்.

சிற்பி : உணவில் ஏதும் சோதனை இருக்கிறதோ !

குமரி : சோதனை ஏதும் கிடையாது. உபசரிப்பிற்காக மூன்று நாள் சோதனை நடந்தது. முடிவில்

நீங்கள் வெற்றி பெற்றுவிட்டீர்கள். வெற்றிக்குப் பரிசு, எங்கள் வீட்டு உணவு. அதனை உங்கட்குத் தந்த பிறகு பார்க்கலாமென்ற யோசனை என் தந்தைக்கு.

சிற்பி : மூன்று நாட்களாக எதனைச் சோதனை செய்தீர்கள் ?

குமரி : உங்கள் சிற்றுளியின் சத்தத்தையும், சுத்தியினடியையும்.

குமரி : சிற்றுளியின் ஒலி ஸ்ருதியைவிட்டு மாறவேயில்லை. சுத்தியடி தாளத்தைவிட்டு மாறவேயில்லை. அதனால் ஜீவனுகிய கலை உங்களிடமிருப்பதால். அக்கலையை உணர்ந்த தந்தை இன்று என்னிடம் உணவு கொடுத்தனுப்பினர்.

சிற்பி : பருவமுற்ற உன்னிடம் கொடுத்தனுப்பினரே !

குமரி : பருவத்தைப்பற்றிய கற்பனையைச் சிலையில்தானே இணைக்கத் தெரியும்.

சிற்பி : ஆம். அதனுல்.......

குமரி : கல்லிலே காதலையும், தெய்வீக வடிவிலே காமத்தையும் இணைத்து வாழ்பவர்கள் எந்த உருவத்தையும் கலைத் தெய்வ வடிவமாகவே கருதுவார்கள் என்பதும், அவர்கள்பால் கயமைத்தனம் எக்காலத்தும் ஏற்படாதென்பதும் என் தந்தையின் முழு நம்பிக்கை.

சிற்பி: உன் தந்தை ஞானத்தோடு பண்பாட்டையும் அல்லவா தெரிந்துகொண்டிருக்கிறார்.

குமரி: ஞானத்தைச் சூன்யமாக்கிக்கொள்ளும் பழக்கத்தைப்பழகிக் கொள்ளவில்லை. உணவை உண்ணுங்கள்.

சிற்பி: உணவா? எவ்விதமான உணவு?

குமரி: சர்க்கரைச்சாதம், தயிர்ச்சாதம்.

சிற்பி: இனிப்பும், காரமும்.

குமரி: நீங்கள் அடிக்கும் சிலையும் முருகன் தானே.

சிற்பி: ஆம், முருகன் ஆறுமுகமாய்க் காட்சியளிக்கப் போகிறான்.

குமரி: இனிமையாகிய தமிழுக்கு சர்க்கரைச் சாதமும், கலையிடமிருந்து கருத்துப் பிரியாமலிருக்கக் காரமும் கலந்திருக்கிறது.

சிற்பி: தயிரைத் தந்தையாக மதிக்கிறேன். சர்க்கரையை உன் உருவமாக எண்ணுகிறேன்.

குமரி: தந்தையைத் தயிரோடு சேர்ப்பதா?

சிற்பி: தாய் சுத்தமான பாலாயிருந்து, உன் தந்தையால் தயிராகி, இருவரும் தயிராகிவிட்டார்கள். அதனால் தந்தையைத் தயிராக்கி, உன் இன்மையான வாதத்திற்காகச் சர்க்கரையாக்கிவிட்டேன்.

குமரி : கற்பனையிலும் அளவுக்கு மீறியிருக்கிறீர்கள். நீங்கள் உண்ணுங்கள். பிறகு பேசலாம்.

சிற்பி : சிக்கலைவிட்டுப் புறப்பட்டபோது சோறு தந்ததும் ஒரு மங்கை, ஊருக்குள் வந்த நான்காம் நாள் சோறு தந்ததும் ஒரு மங்கை. கலையே உன் விளையாட்டின் தன்மையை யார் அறியமுடியும்? எனச் சொல்லிவிட்டு, உணவு கொள்ள முனைந்தான். பண்பாட்டோடு சோறுண்ணும்வரையில் காத்திருந்து, முடிந்ததும் வருகிறேனெனச் சொல்லிக் குமரி அங்கிருந்து போய்விட்டாள். முருகனோடு இசை வித்துவானின் தொடர்பு வளர்ந்துகொண்டே வருகிறது. இசைக்கலையின் தத்துவங்களைப்பற்றிப் பேசிக்கொண்டே வேலை செய்கிறான். வித்துவானின் மகள் குமரி அடிக்கடி சிற்பிக்கு உதவிசெய்து வருகிறாள்.

ஒருநாள் தன் தந்தையிடம்,

குமரி : சிற்பியைப் பார்க்கும்போது நல்லவராகவே தெரிகிறது.

வித் : மகளே, பார்வையில்கூட பண்பு தவறா நெறியுடன்தான் விளங்குகிறார்.

குமரி : வேடிக்கையாகவும் பேசுகிறார். கருத்தை மறைத்து அழகாகவும் பேசுகிறார்.

வித் : சிற்ப ஞானத்தோடு, இசை ஞானத்தையும் அவர் பெற்றிருக்கிறார்.

குமரி: அவரைப்பற்றி உங்கள் எண்ணம் ?

வித்: அவசியம் நீ தெரிந்துகொள்ளவேண்டுமா ?

குமரி: என்னப்பா ? இப்படிக் கேட்கிறீர்கள் ? விருந்துண்ண வருபவரின் நிலைமையைத் தெரிந்து கொள்ளாமல் விருந்தளிப்பதில்லை யல்லவா? அவ்வாறிருக்கையில் நம் வீட்டுணவையே சாப்பிடுபவரின் நிலைமையைத் தெரியவேண்டாமா.

வித்: உணவளிப்பது நம் கடமையாயிருக்கும்போது, நிலைமையைப்பற்றி ஏன் எண்ணவேண்டும்.

குமரி: நாம் சமைக்கும் உணவின் அடிப்படை இசை, இசைவழியாகச் சமைக்கும் உணவைச் சாப்பிடுபவரும் ஒரு இசைவாணராக மாறவேண்டுமல்லவா ?

வித்: இசைவாணரையும் மிஞ்சிவிடும் கலையல்லவா அவரிடமிருக்கிறது.

குமரி: கலையிருக்கலாம். நாமளிக்கும் உணவு அன்பு வயப்பட்டது. அதனால் அவருடைய கலையில் ஏதாவது புதுமை ஏற்படாவிட்டால் பயனில்லை.

வித்: அம்மா! உணவு புதுமையை யுண்டாக்கலாம். அன்புஅதிசயத்தைத்தோற்றுவிக்கலாம். ஆனால்....

குமரி: சிற்பிக்கு என்ன தோன்றப்போகிறதோ என்ற கவலையா ?

வித்: தோன்றுவதைப்பற்றிக் கவலையில்லை. உணவு உன் கையால் பரிமாறப்படுவதால்தான் கவலை.

குமரி: என் கை என்ன கலையுணராக் கையா?

வித்: கலையுணரும் கையா யிருந்தாலும், பெண் கை ஆயிற்றே, அதனால்........

குமரி: சிற்பி, காமாந்தகாரராக மாறிவிடுவாரென்ற எண்ணமோ?

வித்: சிற்பி மாறுவிட்டால், அவன் உருவாக்கும் சிலை அழகன் சிலை.

குமரி: அழகன், அழகுபெறு குமரியால் பரிமாறும் உணவின் சக்தியால், தமிழனுகவே மாறிவிடுவான்.

வித்: மகளே, உன் அழகின்மீது இவ்வளவு பற்றுதலா?

குமரி: அழகு மீது பற்றில்லை. கலையழகின்மீது பற்றுக் கொள்ளும்போது, தன்னழகின் தன்மை தெரிய வேண்டும். நடனமாடும் பெண், தான் அழகியென்ற நம்பிக்கையோடுதான் ஆடவேண்டும்.

வித்: அழகே சதி செய்தால்?

குமரி: வாழ்க்கையின் சுகத்தைப்பற்றிக் கவலைப்படுமிடத்திலல்லவா கவலை ஏற்படும்.

வித்: உனக்கு வாழ்க்கை அவசியமில்லையோ?

குமரி: வாழ்க்கையெல்லாம் கலையாகவே யிருக்கவேண் டும். அதின் அழகையே என் வாழ்வாக எண்ணிக் காலந்தள்ளவேண்டும்.

வித்: துறவிக்குள்ள ஆசையது.

குமரி: ஆம் அப்பா, கலைஞர்கள் கடவுளைச் செய்யும் போது, தன்னைத் துறவியாக்கிக்கொண்டுதான் செய்கிருர்கள்.

வித்: அதனுல்?

குமரி: சிற்பியோ கடவுளைச் செய்கிருர். அவருக்கோ நான் உணவு தருகிறேன். துறவியின் நிலையி லிருந்து முருகனை உருவாக்கும் சிற்பியோடுபழகும் நான் துறவியாகத்தானே போகமுடியும்?

வித்: துறவி, இல்லறமாக மாற நினைத்தால்........

குமரி: [என்னப்பா, இசைக் கலைஞனின் உண்மை உரு வத்தைக் காட்டுகிறீர்கள்.] காதலைச் சங்கீதமாக்கி, புகழ் வந்தவுடன் காமத்தைச் சங்கீதமாக்கும் நிலைமையில் பேசுகிறீர்கள். சிற்பி ஒரு உயர்தரக் கலைஞன். அழகு தெய்வத்திற்காகத் தன் உறுப் பையே தானம்செய்தவன். அவனை நான் காதலித் தால், என் காதலே முருகனுக மாறி, நானே தெய்வீகமாகிவிடுவேன்.

வித் : அம்மா, அளவு கடந்த உன் கலை ஆர்வத்திற்கு என் நன்றி. உனக்கு இந்த ஞானம் எப்பொழுது வந்தது ?

குமரி : தாயின் எண்ணமேதான். தங்களின் மனைவி இறக்கும்போது சொன்ன வார்த்தைகள்தான் என்னை நீங்கள் இசைக் கலையில் ஈடுபடச் செய்தது.

வித் : இறந்த பிறகுதான் உனக்கு ஞானம் வளர்ந்திருக்கிறது.

குமரி : உயிரோடிருக்கும் வரையில் தாயின் கண்களே ஞானத்தை வளர்க்காது. இறந்த பிறகு ஞானக் கண்ணால் ஆத்மாவின் நிழலாக ஆசி புரிகிறாள். அதனால் இந்த ஞானம் இறந்த பிறகு வளர்ந்திருக்கலாம்.

வித் : தாயின் கண்கள் அவ்வளவு பொல்லாதன்வைகளா ?

குமரி : ஆதரிக்கும் கரங்கள், அன்பால் அமுதூட்டும் மனம், கண்டித்து வளர்க்கும்போது காட்டும் கோபம், இவ்வளவும், தான் பெற்ற குழந்தை அதிசயமாகப் பேசும்போது பார்வையே கண்ணோட்டமாக மாறுகிறது.

வித் : அழகான ஆராய்ச்சி. உன்னிடம் நான் உபதேசம் பெற்றுக்கொள்ள வேண்டியதுதான். சிற்பியிடம் பேசும்போது வந்ததோ ?

குமரி : சிற்பி உருவாக்கும் சிலையோ முருகன் சிலை. அவர் தந்தைக்கு உபதேசம் செய்தவர். அதனால்..

வித் : ஆண்மைக் கடவுள் பெண்மையாகி தந்தைக்கு கருத்துரை தர நினைத்தாய் போலும்.

குமரி : பரிகாசம் வேண்டாமப்பா. நாழிகை யாகிறது. சிற்பிக்கு ஆகாரம் கொடுத்துவிட்டு வருகிறேன்.

சிற்பி உருவாக்கும் சிலை வளர்ந்துகொண்டே வருகிறது. அங்கக் குறைவுள்ள ஒருவன் உருவாக்கும் சிலை ஒரு பகுதியின் பலத்திலேயே நிற்கச்செய்ய வேண்டுமென்ற சிந்தனையோடு செதுக்கிக்கொண்டிருக்கிறான். அந்த நேரத்தில் குமரி உணவு கொண்டுவந்து நிற்கிறாள். அவள் வந்தது தெரியவே தெரியாது. குமரியும் செதுக்கும் விதத்தைக்கண்டு பின்னாலேயே நிற்கிறாள். பன்னிரண்டு கைகளைச் செதுக்கிக்கொண்டிருக்கிறான். கைகளில் அதிசயத்தை வைப்பதற்கு இடமில்லையென எண்ணித் திரும்புகிறான். குமரி, ஒரு கையைச் சோற்று மூட்டையிலும், ஒரு கையை இடுப்பிலும் வைத்துக்கொண்டு நெளிந்து நிற்கிறாள்.

நெளிந்து நிற்கும் அவள் நிலையை மயிலாகவே நினைக்கிறான். பெண்களே மயிலின் சாயல் தானே என எண்ணி, மயிலின் கால் பலத்தில், ஆறுமுகனை நிறுத்திக் காண்பிப்பதென உறுதி செய்கிறான். உறுதியோடு குமரியிடம்:— குமரி நாட்டியம் கூடப்பழக்கமோ ?

குமரி : நாட்டியமாடத் தெரியாது. கலையழகைப் பார்க்கும் போது நாட்டியமாக மாறிவிட்டேன்.

சிற்பி : முருகனின் கைகளைப் பார்த்தா ? என் சிற்றுளியின் திறமையைப் பார்த்தா ?

குமரி : பன்னிரண்டு கைகளைப் பார்த்தவுடன், பண்பு பெற்ற நாட்டியமே என் கண்முன் தோன்றியது.

சிற்பி : தாய் நாட்டியத்தில் தேர்ச்சி பெற்றவளோ ?

குமரி : ஆம், தாயின் நாட்டியத்திற்கு, என் தந்தை சாகித்யம் செய்து இசை பாடுவார்.

சிற்பி : இருவருக்கும் பிறந்த காரணத்தால்தான் பன்னிரண்டு கைகளைப் பார்த்தவுடன், நாட்டியக்கலை நினைவிற்கு வந்திருக்கிறது.

குமரி : தாய் தந்தைக்கும் பன்னிரண்டு கைகளுக்கும் என்ன சம்பந்தம் ?

சிற்பி : பகுத்தறிவு என்பது ஆறு. இரண்டு ஆறுகளைக் கூட்டினால் பன்னிரண்டு, அதனால்தான், பெண்மைக்கு அழகும், ஆண்மைக்கு வேலும் உடையவனை முருகன் விளங்குகிறுன். அதைக் காரணமாக வைத்துத்தான் அழகு தெய்வத்திற்குப் பன்னிரண்டு கைகள் அமைத்தார்கள்.

குமரி : கலைஞரே, கருத்தின் தத்துவம் தெரிந்த பிறகு, நீங்கள் தான் முருகனென நினைக்கிறேன்.

சிற்பி: குமரி! நான் முருகனுயிருந்தால்தான், முருகனேச் செதுக்க இயலும். உள்ளத்திலுறையும் முருகன் செதுக்குபவனைவிடக் கற்பனை அதிகம்பெற்றவன்.

குமரி: கற்பனை மட்டுமல்ல. உயர்ந்த ஞானமுள்ளவனுகவும் தானிருக்கவேண்டும்.

சிற்பி: காரணம்! நான் தெரிந்து கொள்ளலாமல்லவா?

குமரி: உள்ளிருக்கும் கடவுள், வள்ளியைத் தேடிப் போவதற்கு மாறுவேடமணியாத கடவுள். அதனுல்தான் குமரிகளோடு பேசும்போது, மாறு வேடமணியாத மால்மருகனுகவே வாழ்கிறுர்.

சிற்பி: காதலுக்காக வாழ்வதிலும் கடமையைப்பற்றிக் கவலைப்படுபவர்களும் வாழத்தான் செய்கிறுர்கள்,

குமரி: வாழ்வதிலும்கூடவா கடமையிருக்கிறது?

சிற்பி: குமரி, வாழ்வைக் கலையாக மாற்றிக் கொள்பவன், கடமையை வாழ்வோடு இணைத்து கற்பனைக்கு இடமளித்துக் கொண்டே வருகிறுன். அவன் உயர்ந்த எண்ணத்தின் எழுச்சியை உணர்ந்தவர்கள், காதலைத் தெய்வீகத்திடம் ஒப்புவித்துவிட்டு கலையை நுகர்வதுதான் தன்கடமையென நினைத்து விடுகிறுர்கள்.

குமரி: நுகர்ச்சியே கலையாக மாறவேண்டும். ஆனுல் நாடு வேறு மாதிரியாக நினைத்துவிடுகிறது.

சிற்பி : நாடு அவ்விதமாக நினைப்பது தெரிந்துதான், மயி லின் காலின்கீழ் நல்ல பாம்பு இருக்கிறது.

குமரி : கருமேகத்தைக் கண்டு ஆடும் மயில் பாம்பை ஏன் மிதித்திருக்கவேண்டும்?

சிற்பி : கருமேகத்தைக் கண்டவுடன் மழை வருமென்று தான் தோகையை விரித்தாடும். பாம்பு மகிழ்ச்சி யோடிருக்கும்போது, தீண்டிப்பார்க்கும். தீண் டினால் நிலை மாறிவிடும். அதை மிதித்துக் கொண்டே அழகு தெய்வத்தைத் தாங்கிக் கொண் டிருக்கிறது. வாழ்க்கையில் நல்லதை மாற்ற பல நல்ல பாம்புகள் தீண்டி தீமையாக்கிவிடும். அதை மிதித்துத் தன் தெய்வீகப் பெண்மையின் சாயலால், அழகு பெறு குடும்பத்தைத் தாங்கி யிருக்க இயலுமென்று அறிவிக்கிறது.

குமரி : அதை ஏன் வணங்கும் கடவுளிடம் வைக்க வேண்டும் ?

சிற்பி : கோவிலுக்குள் வருபவர்கள் தம்பதிகளாய் வாழ்ந்து வருபவர்களும் இனித்திருமணம் செய்து கொள்பவர்களும் தான். அவர்களெல்லாம் ஆண்டவனை வணங்கும்போது பாம்பு தெரியாது. காரணம், பாம்பை நான் மிதித்து வைத்திருப்ப தால். என்னை மனம் ஒன்றி வணங்கினால், கெடுக்கவரும் பாம்பாகிய நயவஞ்சகர்களிட மிருந்து தப்பிவிடலா மென்றுதான் மறைத்து வைத்திருப்பது.

குமரி: பேச்சில் உணவை மறந்துவிட்டீர்கள். நல்ல கருத்தைத் தெரிந்துகொண்டேன்.

சிற்பி: நல்ல கருத்தை நல்ல உள்ளத்திடம் சொல்ல வாய்ப்பளித்த என் கலைக்கு நன்றி என்று சொல்லி விட்டு உண்டான். கை கழுவிக்கொண்டு குமரியைப் பார்த்து, இன்று உணவு மிகச் சிறப்பு என்று சொன்னான். குமரி புன்முறுவல் பூத்தவளாய் குளத்திலிறங்கி கலங்களைக் கழுவச் சென்றாள்.

கலங்களைக் கழுவிக்கொண்டேயிருக்கையில் கால் வழுக்கி கீழே விழுந்துவிடும் சமயம், சிற்பி ஓடித் தடுத்து விழாமல் காப்பாற்றுகிறான். காப்பாற்றியவுடன் ''குமரி, கண்ணிருந்தும் தவறலாமா?''

குமரி: கண் திறந்திருந்தது கருத்து வேறிடமிருந்தது.

சிற்பி: கருத்து பாத்திரத்தைச் சுத்தம் பண்ணும்போதா வேறிடத்திலிருக்கவேண்டும்.

குமரி: பாத்திரத்தைச் சுத்தம் செய்யும்போது உங்களின் உள்ளத்திலுள்ள கலையின் சுத்தத்திற்கு யார் நன்றி செலுத்தப் போகிறார்களென்று எண்ணினேன். தவறிவிட்டேன்.

சிற்பி: அந்த நன்றியைப் பற்றி நீ கவலைப்பட வேண்டிய தவசியம் என்ன ?

குமரி : விருந்தாளிக்கு நல்ல பெயர் கிடைப்பதோடு நல்ல பரிசும் கிடைத்தால் எங்களுக்கல்லவா மதிப்பு.

சிற்பி : பரிசு கிடைக்கு மென்றுலே பயமா யிருக்கிறது. பரிசுக்காக நான் வாழ்வதென்றுல் என் கலேயே வளர்ந்திருக்காது.

குமரி : உங்களுக்குத் தேவையில்லே. கட்டைவிரலில்லாமல் கந்தனே உருகுவாக்குவதென்றுல் சின்னக் காரியமா?

சிற்பி : உள்ளத்திலிருக்கும் முருகனே உருவாக நினேத்துவிட்டான். இவன் கட்டை விரலில்லாதவனென்று நினேத்திருந்தால், இவ்வளவு அழகாக அமைந்து கொண்டு வருவானு ?

குமரி : முருகனிடமுள்ள நம்பிக்கையே தான், உங்களின் கலே வளர்ச்சிக்குக் காரணம்.

சிற்பி : நம்பிக்கையின் நாடகத்தில் தானே, உன் தந்தை உன்னே நடிக்கவைத்திருக்கிருர்.

குமரி : நடிப்பதோடு நின்றுவிடாமல், நல்லதொரு கலே தெரிந்தவளாகவும் வரவேண்டும்.

சிற்பி : நாழிகையாகிறது. நாளே நாடகத்தின் ஆசிரியரைப் பற்றி விசாரிக்கலாம். போய்வா ?

குமரி : நான் போய் வருகிறேன். வணக்கம்.

யாழ்ப்பாணத்து ஆதீனமோ, சிலேயின் அழகைக் கேள்விப்பட்டவுடன் ஆச்சரியப்பட்டார். ஆதீனத்தி

லுள்ள கட்டளைத் தம்பிரான் மட்டும், சிலையைப் பற்றிப் பேசும்போதெல்லால் கவலைப்பட்டுக் கொண்டிருந்தார். காரணம் அழகான முருகனைச் செய்யும் சிற்பி கட்டை விரலிழந்தவனாக யிருக்கிறானே என்பதனால் தான். கட்டை விரலில்லாதபோதே இவ்வளவு அழகாக உருவாக்கும்போது, விரலிருந்தால் இன்னும் எத்துணை அழகாக யிருந்திருக்கு மென்று நினைத்தார்.

ஆதீனம் அவர்களின் பிறந்நாள் விழா நடந்தது. அன்று பலர் வந்திருந்தனர். இசை நாட்டியம், நடந்தன. அன்று சமயச் சொற்பொழிவுகள் நிகழ்ந்தன. சமயச் சொற்பொழிவு செய்ய வந்த ஒருவர் பேசும்போது, கோவிலிலுள்ள சிற்பங்களைச் செய்பவர்களைப் பொறுத்துத்தான், சிலைக்கு உயிருண்டாகும். உறுப்புகளை யிழந்த சிற்பிகள் செய்யும் சிலைகளுக்கு அவ்வளவு பெருமை கிடையாதெனச் சொல்லிவிடுகிறார். அந்தப் பேச்சு ஆதீனத்தின் களங்கமற்ற உள்ளத்தில் ஒரு புது வேதனையைத் தர ஆரம்பித்தது.

ஆதீனத்தின் வேதனை தான் வளர்ந்து கொண்டே வருகிறது. முருகனோ, அழகு பெறும் தெய்வமாக வளர்ந்து வருகிறான். சிற்பிக்கு உற்சாகத்தின் அளவுக்கு எல்லையில்லை. எல்லாரையும்விட குமரியும், இசை வித்துவானும் தான் ஆனந்தக் கடலில் மூழ்கியிருந்தனர். முருகன் ஆறுமுகமாகத் தோன்றி, மயில் மீது அமர்ந்திருக்கும் அழகைப் பார்க்கத் தெவிட்டா விருந்தாக யிருந்தது.

மயில் கால்கள் இரண்டின் வலுவில் நிறுத்தினன் முருகனை. பத்துக் கைகளிலுள்ள ஆயுதங்களைப் பார்க்கும் போது, உயிராகவே காட்சியளித்தன. சிற்பி மீண்டும் அழகுபடுத்தி அழகின் வடிவமாகவே உருவாக்கி விட்டான். இசை வித்துவான் வீட்டிற்கு அன்றுதான் சிற்பி வந்தான். குமரியின் மகிழ்ச்சிக் களவேயில்லை. குமரி வரவேற்பளிக்கும்போது, பரிமாறிய தன் கையைத் தன் கண்ணில் ஒற்றிக்கொண்டாள்.

சிற்பியும் இசை வித்துவான் வீட்டிலுள்ள வாத்தியங்களைப் பார்த்தான். வீணையின் வடிவத்தைப் பார்த்தவுடன், அதனின் நாதத்தைப் பார்க்க கம்பிகளை மீட்டினன். சுருதி சேர்ந்தே யிருந்தது. அந்தச் சத்தத்தைக் கேட்டவுடன் இசை வித்துவான் சிற்பியைப் பார்த்து ''குமரியின் பேச்சைத்தான் கேட்டிருக்கிறீர். பாட்டைக் கேட்டதில்லை. அப்படித்தானே வெனச் சொல்லி, குமரியைப் பாடும்படி வற்புறுத்துகிறுர்.

குமரி பாடினல், தான் மிருதங்கம் வாசிப்பதாகச் சொல்கிறுன். தந்தையும் மகளும் சம்மதிக்கிறுர்கள். சிற்பி மிருதங்கம் வாசிக்க, குமரி பாடுகிறுள். இராக விளக்கங்களின் கம்பீரத்தைக் கண்டு பிரமிக்கிறுன். பாட்டு ஆரம்பித்தவுடன் மிருதங்கம் வாசிக்க ஆரம்பிக்கிறுன். தாளக்கட்டையும், வாசிக்கும் பாணியையும் கண்டு வித்துவான் திகைப்புடன் கவனிக்கிறுர். பாட்டு முடிந்தவுடன் உணவுண்ணச் செல்கிறுர்கள். உணவுண்டு முடிந்தவுடன் வித்துவான் சிற்பியிடம் :— கலைஞரே ! இன்று சாப்பாடு எப்படி ?

சிற்பி : சாப்பாட்டைப் பற்றிச் சொல்வதை விட அதைத் தயாரித்தவர்களைப் பற்றித் தான் சொல்ல வேண்டும்.

குமரி : தயாரித்தவரைவிட, தயாராகாத கலையின் சாமர்த்தியத்தைத்தான் புகழவேண்டிவருகிறது.

சிற்பி : மிருதங்கத்தைப்பற்றியா ? அது ஒவ்வொரு சிற்பக் கலைஞருக்குமுள்ள ஞானமது. தாளஞான மில்லாவிட்டால், தெய்வங்களுக்கு காலமைக்கும்போது தவறிவிடும். தெய்வத்திற்குப் பதில் பைசாசமாக மாறிவிடும்.

குமரி : கலை உணர்ச்சியோடு, தாள ஞானமும் பழகிய காரணத்தினுல்தான், மயிலின் காலில் அவ்வளவு பாரத்தையும் தாங்கவைத்து விட்டீர்கள்.

சிற்பி : எனக்கே ஆச்சரியமா யிருக்கிறது. முருக வடிவத்தின் மீது கூட எனக்கு கவர்ச்சி ஏற்படவில்லை. மயிலின் காலை விட கண்ணைத் தான் ரசித்தேன்.

குமரி : மயிலின் கண் அவ்வளவு அழகா ?

வித் : தாங்குகின்ற மயிலின் இறுமாப்பு, கண்களில் தானிருக்கிறது.

குமரி : தந்தையே, தாங்கள் எப்பொழுது கவனித்தீர்கள் ?

வித் : கண்களின் கம்பீரம் தான் முருகனைத் தாங்கி நிற்கிறது.

குமரி : கண்களைத் திறந்துவிட்டால் மயில் பறக்குமோ ?

சிற்பி : கண் திறக்கும் நிலை ஏற்படுமானால் பறந்தால் கூட ஆச்சரியமில்லை என்று சொல்லிக்கொண்டிருக்கும் போது, ஆதீனத்தின் அழைப்பு வந்தது. அதை ஏற்றுக்கொண்டு வித்துவானிடமும், குமரியிடமும் சொல்லிக்கொண்டு புறப்பட்டான்.

சிற்பி வருவதற்கு முன்னதாகவே ஆதீனம் முருகனைப் போய்ப் பார்த்துவிட்டு, மிகவும் வருத்தப்பட்டார். விரல் போன கையால் அமைக்கப்பட்டதாயிற்றே என எண்ணி நொந்தார். கட்டளைத் தம்பிரானிடம் யோசனை கேட்டார். அவரும் என்ன செய்வதென்று புரியவில்லையெனச் சொன்னார். பலரை விசாரித்தார். ஒருவரும் சரியான பதில் சொல்லவில்லை. முடிவு ஒன்று செய்தார்கள். சிற்பி கட்டை விரல் இழந்தாலும், அந்தச் சிலைக்கு உயிருண்டென நிரூபித்தால் சிலையை ஏற்றுக்கொள்ளலாமெனத் தீர்மானித்தார்கள்.

சிற்பியும் ஆதீனத்திடம் வந்து வணங்கி நின்றான். அங்கிருப்பவர்களின் முகத்தில் கவலை குடிகொண்டிருப்பதைப்பார்த்தான். சிக்கலில் கண்டது வஞ்சக எண்ணம். இங்கு சந்தேகத்தின் ரேகைகள் முகத்தில் பாய்ந்திருப்பதைத்தான் கவனித்தான். வரவேற்க வேண்டியவர்கள் மௌனமாக இருப்பதைக் கண்டு, நாமே கேட்டுவிட்டால் என்னவென யோசித்தான். பின் ஆதீனத்தின் மரியாதையைப் புரிந்துகொள்ளாதவனாக நினைத்துவிட்டாலென்செய்வ தெனவும் நினைத்தான். பின் ஆதீனமே,

"சிற்பியே, உன்னால் அமைக்கப்பட்ட சிலை அழகாக் இருக்கிறது."

சிற்பி: மிக்க மகிழ்ச்சி. என்னால் அமைக்கப் பட்ட தல்ல. கலைத் தெய்வத்தினருள்.

ஆதீ: கலைத் தெய்வத்தினருளிருந்தாலும், உமது அங்கக் குறைவு........

சிற்பி: கலைக்குத் தந்த பரிசு. ஆண்டவனே என் கட்டை விரலைக் கேட்டான். கொடுத்துவிட்டேன்.

ஆதீ: ஆண்டவன் கேட்டுத்தானே கொடுத்தீர்கள் ?

சிற்பி: அவன் கேட்டுக் கொடுத்ததினால் தான், மீண்டும் அவனுருவை அழகாக அமைக்க முடிந்தது.

ஆதீ: அவனுருவத்தில் நம்பிக்கை கொண்டிருப்பதற்கு மகிழ்ச்சி. அவன் உயிரை உம் உள்ளத்திடம் வைத்திருக்கிறானென்பதை நம்புகிறீரா ?

சிற்பி: உயிர் மட்டு மல்ல. உருவத்தையே என்னிடம் தான் வைத்திருக்கிறான். இல்லாவிட்டால் இத்தனை அழகாக அவனை உருவாக்கியிருக்க மாட்டேன்.

ஆதீ: உருவத்தையும், உயிரையும், ஒன்றுபடுத்துவதாகக் கற்பனை தானே.

சிற்பி: கற்பனையல்ல. உண்மையேதான்.

ஆதீ : உண்மையென்று வாதாடாதீர். நிச்சயம் தோற்றுப் போவீர்.

சிற்பி : கலைஞன் தோற்றது சரித்திரத்திலேயே கிடையாது.

ஆதீ : இது எளிதான செயலல்ல, கல்லிற்கு உயிர் கொடுக்க வேண்டிய நிலை.

சிற்பி : ஆதீனமவர்களே ! நாங்கள் அமைத்த சிலைதானே தெய்வீகமாக கோவிலுக்குள்ளிருக்கிறது. உயிர் கொடுத்தால் தான் ஆண்டு தோறும் விழாக் கொண்டாடி பல உயிராகிய மக்களை ஒன்று படுத்துகிறீர்கள். அப்படி யிருக்க நான் உருவாக்கிய சிலைக்கு உயிர் கொடுக்க முடியாதா ?

ஆதீ : நிதானித்துப் பேசுங்கள். உங்களின் கலை இறுமாப்பில் பேசாதீர்கள். தவறிவிட்டால் கலை உலகிற்கே அவமானம்.

சிற்பி : தன்மானமான கலையிடம் நம்பிக்கை யில்லாதவன் கலைஞனாகவே வந்திருக்க முடியாது. எந்தச் சோதனைக்கும் தயார்.

ஆதீ : சோதனையைப் பற்றி சொல்லலாமா ?

சிற்பி : எப்பொழுது வேண்டுமானாலும் சொல்லுங்கள்.

ஆதீ : நாளைக் காலை நம் சோதனையை நடத்துவோம். அதற்கு நீர் தயாரா ?

சிற்பி : நாளைக் காலை யென்ன ? இன்றே, இப்பொழுதே நான் தயார்.

ஆதீ : இன்றிரவு நான் தியானத்திலிருந்து நிதானிப்பேன். நாளை முடிவு சொல்கிறேன்.

சிற்பி : தாழ்மையான வேண்டுகோள். தியானத்திலிருக்கும்போது நினைப்பது, முருகனையா ? அல்லது அவரின் தந்தையையா ?

ஆதீ : ஐந்தெழுத்து வடிவமான சிவனைத் தான்.

சிற்பி : தந்தையிடம் கேட்கும்போது, மகனைப் பற்றியும் விசாரியுங்கள். சிவனே உத்தரவு கொடுப்பார்.

ஆதீ : நாளைக் காலையில், இசை வித்துவானுடன் வர வேண்டும். சோதனைக்குத் தயாராகவு மிருக்க வேண்டும்.

சிற்பி : சித்தம். நான் தயாராகத் தேவையில்லை. நான் வணங்கும் கலைத்தெய்வமே வந்துதவு மென்று சொல்லி வெளியில் வந்து விட்டான்.

ஆதீனம் தன் சகாக்களை அழைத்து யோசிக்கத் தொடங்கினார். வந்திருந்தோரனைவரும் கலைக்குப் பரிசு தருவதைவிட சோதனையை எவ்வாறு நடத்துவதென்ற போராட்டத்திலேயே சிந்தனையைப் போக்கினர். கட்டளைத் தம்பிரான் ஆதீனத்தை அணுகி, "எனக்கு ஒரு யோசனை தோன்றுகிறது."

ஆதி : என்ன யோசனை ? அதைச் சொல்லுங்கள்.

க. த : சிலைக்கு உயிர் கொடுக்கச் சொன்னால்.

ஆதி : அது நடவாத செயல். உயிர் கொடுக்கச் சம்மதிக்கமாட்டான்.

க. த : சம்மதிக்காவிட்டால், ஆறுமுகனை ஏற்றுக் கொள்ள முடியாதென்ற முடிவைத் தெரிவித்து விடுங்கள்.

ஆதி : ஏற்றுக்கொள்ளாவிட்டால், நமக்குக் கலையுணர்ச்சி கிடையாதென்றுதான் அர்த்தம்.

க. த : கலையுணர்ச்சிக்காக, வணங்கும் மக்களைக் கெடுக்கலாமா ?

ஆதி : அதுவும் உண்மைதான். கட்டை விரலையிழந்த சிற்பியின் சிலையை வணங்கினால், விரும்பிய வரம் கிடைக்காது. அதனால் மயிலின் கண்களைத் திறக்கச் சொல்வோம். அது பறக்குமானால் முருகனின் சிலையை ஏற்றுக்கொள்வோம்.

க. த : சரியான முடிவு. ஆண்டவனுக்குக் கலையிடம் பிரியமிருந்தால், அவரே அந்த மயிலைப் பறக்க வைக்கட்டுமே.

ஆதி : நம் வேடத்திற்கே பொருத்தமில்லாத சோதனை.

க. த : வேடத்திற்கும் சோதனைக்கும் என்ன சம்பந்தம்?

ஆதி : நாம் அணியும் சின்னங்களெல்லாம் ஆண்டவனைப் பணிவதாகக் காட்டும் சின்னங்கள். ஆண்டவன் நம் மீது நம்பிக்கை வைத்திருந்தால் இந்த எண்ணம் நமக்கு வந்திருக்காது.

க. த : தாங்களே சிற்பியின் சார்பில் பேசுகிறீர்கள்.

ஆதி : சிற்பியின் சார்பில் பேசவில்லை. கலைத்தெய்வத்திற்குச் செய்யும் துரோகத்தைச் சோதனையாகச் செய்யப் போகிறேம்.

க. த : மயில் பறக்காவிட்டால் என்ன செய்வீர்கள் ?

ஆதி : மயில் கட்டாயம் பறக்கும். பறந்த பிறகு பேசிக் கொள்வோம்.

க. த : பறக்கவும் பறக்காது. உம்முடைய நம்பிக்கையை இழக்கப் போகிறீர்கள்.

ஆதி : நாளைச் சோதனைக்குப் பிறகு, சதி உதயமாகாமலிருக்க வேண்டும்.

க. த : சதியா, நான் என்ன வஞ்சகனு ?

ஆதி : மயில் பறந்து முருகனுருவம் நமக்குச் சொந்தமான பிறகு, வேறு ஊரில் இல்லாமலிருக்கத் திட்டங்கள் அமையாதிருக்கவேண்டும்.

க. த : பறந்துவிட்டால் வேறு ஊரில் இம்மாதிரி முருகனே இல்லாமலிருக்க நானே திட்டமிடுவேன்.

ஆதி : முருகன் சிற்பி சார்பிலிருக்க வேண்டும். சிற்பி யின் தோல்வி, என் தோல்வி.

க. த : காரணம், கூறலாமா ?

ஆதி : என் அதிகாரத்தில் நடந்த கலையின் சோதனை வெற்றி யடையாவிட்டால், என் அதிகாரத்தின் தன்மை தெய்வ நெறியில் கலக்கவில்லை. அருள் நெறி இருள் நெறி, யாக்கித்தான் வேடமணிந்து வாழ்வதாக எண்ணுகிறேன்.

க. த : தங்களின் அருள் வேடத்தி லடங்கிய தல்ல. தங் கள் உள்ளத்தில் பதிந்த தெய்வமே சிற்பிக்கு அருள்பாலிக்கும்.

ஆதி : அதைத் தான் நினைத்து நினைத்து வருந்துகிறேன். நாளை நிகழ்ச்சி முடியும் வரையில் என் மனம் ஓர் நிலையிலிருக்காது. இந்த நிமிடம் முதலே ஆண்டவனை நோக்கித் தவம் புரியப் போகிறேன்.

க. த : தங்களின் மனத்திற்கு நிச்சயம் சாந்தி கிடைக்கும்.

இசை வித்துவான் வீட்டில் சிற்பி சிந்தனையிலாழ்ந் திருந்தான். குமரி, சிற்பியின் நிலையைப் பார்த்து வருத்தத் துடன் உட்கார்ந்திருந்தாள். அவர்களின் மௌனத்தைக் கலைக்க இசை வித்துவானின் இசை கேட்டது. இசை யின் கருத்து தெய்வீகம் என்றும் நம்மை கைவிடாதென் பதாயமைந்திருந்தது. இசை முடிந்த பிறகு வித்துவான் சிற்பியிடம் சோதனை என்ன வெனக் கேட்டுக்கொண்டே

வந்தார். சிற்பி தான் சிந்தனையிலிருந்து கலைந்து, குமரியைப் பார்த்தார். அந்தப் பார்வை நாளை நடக்கும் சோதனையில் வெற்றியடைவதில் உனக்கும் பங்கிருக்கிறதெனச் சொல்வது போலிருந்தது. பின் வித்துவானின் கேள்விக்கு

சிற்பி : நாளைதான் நடக்கப் போகிறது.

வித்து: எந்த வகையிலுள்ள சோதனையாயிருக்கலாம்?

சிற்பி : உயிருண்டா என்ற வினவிற்கு விடையளிக்கும் நிகழ்ச்சியாயிருக்கலாம்.

வித்து: தங்களின் விடையைப் பற்றி நான் தெரிந்து கொள்ளலாமா ?

சிற்பி : என் விடையை நான் உருவாக்கிய முருகனே தயார் செய்து விடுவாரென்ற நம்பிக்கை.

வித்து: நம்பிக்கையை வரவேற்கிறேன். ஆனல் ?......

சிற்பி : சந்தேகம் வேண்டாம். உள்ளே வளர்த்த கலைத் தெய்வமது.

வித்து: கட்டை விரலில்லாமல் செய்த திறமையைப் புகழத் தெரியவில்லை ?

சிற்பி : கட்டை விரலில்லாமல் செய்ததால்தான் சந்தேகம் பிறந்துவிட்டது.

வித்து: சந்தேகமா ? யாருக்கு ?

சிற்பி: ஆதீனங்களுக்கும், அதன் குழாங்களுக்கும், கட்டை விரலில்லாமலடிக்கும் திறமையுள்ளவனுக்கு, ஏன் சிலைக்கு உயிர் கொடுக்க முடியாதென்ற யோசனை.

வித்து: அதனால் அவர்களுக்கு என்ன லாபம் ?

சிற்பி: அவர்களுக்கு ஒன்றும் லாபமில்லை. கலைத் தெய்வத்தின் அருளுக்கு லாபம் தேடுகிறார்கள். தேடிய லாபம் பொருளாகாமலிருக்க வேண்டுமென்பது எனது வேண்டுதல்.

வித்து: லாப நஷ்டக் கணக்கைப்பற்றிக்கூட நான் கவலைப் படவில்லை. வெற்றிதான் முக்கியம்.

குமரி: வெற்றி மட்டும் கிட்டிவிடுமேயானால்......

சிற்பி: குமரி. அவசரப் பட்டுவிடக்கூடாது. நம் எண்ணத்தின் பிரகாரம், நாம் உருவாக்கிய முருகனின் எண்ணமிருக்க வேண்டும். படுத்துறங்குவோமெனச் சொல்லிவிட்டு, வெளியில் வந்து ஆகாயத்தைப் பார்த்தபடியே படுத்துவிட்டான். குமரியும், ஆழ்ந்த சிந்தனையில் உறங்காமலேயே விழித்துக்கொண்டேயிருந்தாள்.

ஆதீனமும் இரவு முழுவதும் சிந்தனையிலே இருந்தார். தான் வணங்கும் கடவுளை தன்மீது குற்றம் வராமலிருக்க வேண்டுதல் செய்தார். சிற்பி பயந்து கொண்டு எங்கு வெளியூருக்குப் போய்விடுவானோ வென்றுகூட

எண்ணினார். கல்லிற்கு உயிர் கொடுக்க முடியுமா? இது நடக்கக் கூடிய காரியமா? என்று நெடிது எண்ணினார். பாட்டினால் கதவு திறக்க வைத்த அடியவர்கள் பிறந்த நாடுதானேயிது, ஏன் நடக்கக்கூடாது. கட்டை விரலில்லாமல் உருவாக்கும் திறமை படைத்தவனுக்கு, உயிர் கொடுக்க முடியாதா? தந்திரத்தால் ஏதாவது செய்வானா? கடந்த காலத்தில் வேலைகளின் நுணுக்கம் தெரியாமல் செய்து, கடவுளருளெனப் பலரை நம்பவைத்த கலைஞர் வாழ்ந்த தமிழ் நாடாயிற்றே? இருந்தாலும் அருள் பிறந்த நாடல்லவே? நாம் சொல்லுகிறபடி மயில் பறந்துவிட்டால்...... நடந்த பிறகு யோசிக்கலாம். நடந்துவிட்டால் நம் போன்ற உறுதியுள்ளவர்கள் இல்லை என்ற பெயர் கிடைத்துவிடும் என்று தனக்குள் பேசிக்கொண்டே உலவிக்கொண்டிருந்தார்.

பொழுது விடிந்ததே தெரியவில்லை. விடிந்தவுடன் நீராடி, வெண்ணீரணிந்து, ஆண்டவனை வணங்கும்போது "மாசில் வீணையும்" என்ற பாட்டை ஓதுவார் பாடினார். ஆதீனம் அந்தப் பாட்டு எந்தச் சந்தர்ப்பத்தில் பாடப்பட்டதென்பதை நினைத்தார். அந்த நிலையில் சிற்பியை ஒத்திட்டுப் பார்த்தார். பாட்டினால் பரமனை அழைக்கும் இயல்புகூட அவனுக்கு இல்லையே என வருந்தினார்.

கட்டளைத் தம்பிரான் முதல் யாவரும் வந்துவிட்டனர். சிற்பியை எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்றனர். சிற்பியும், குமரியும் முன்வர வித்துவான் பின்னால் வருகிறார். ஆதீனமும் வந்து சேர்ந்தார். சிற்பி வந்தவுடன்

ஆதீனத்தையும் வந்திருந்த எல்லோரையும் வணங்கினுன். அவனின் முகத்தில் நம்பிக்கையின் எதிரொலி யிருந்தது. பலர் நினைத்தார்கள் சிற்பி பயந்து விடுவானென்று. எவ் விதக் கவலையுமில்லாமல் மகிழ்ச்சியோடிருந்தான். ஆதீ னம் கட்டளைத் தம்பிரானிடம் "நம் நிபந்தனையைச் சொல்லும்" என்ருர். கட்டளைத்தம்பிரான் சிற்பியைக் கூப்பிட்டார்.

க. த: "சிற்பியே, உன் கலைத் திறனை மெச்சுகிருேம். உறுப்பிழந்தவன் உருவாக்கிய உருவத்திற்கு உயி ருண்டா? என்ற ஐயம்?"

சிற்பி: ஐயம் நேற்றே தோன்றிவிட்டது. விளக்கத்திற்கு உத்திரவு தேவை.

க. த: உன் கலையில் உனக்கு நம்பிக்கை இருக்குமாஞல் உன் சிலைக்கு உயிரளிக்க முடியுமா?

சிற்பி: நம்பிக்கையோடுதான் வந்திருக்கிறேன். நிபந் தனையைச் சொல்லுங்கள்.

க. த: முருகனுக்கு உயிர் கொடுப்பதைவிட, அவன் அமர்ந்திருக்கும் மயில் பறக்கவேண்டும்.

சிற்பி! மயில் பறந்தால் நம்புவீர்கள்?

குமரி: கல் மயில் பறக்க முடியுமா?

சிற்பி: குமரி, நம் கடவுளிருக்கும்போது, மயில் பறப்பது அரிதா? கவலைப்படாதே! மயில் மட்டுந்தானே பறக்க வேண்டும்.

ஆதீ: ஆம். முதலில் மயில் பறக்க வேண்டிய ஏற்பாட்டைச் செய்யுங்கள்.

சிற்பி: முருகா! உன் திருவிளையாடலைச் சூரனிடம் காண்பித்தாய். அவன் முதலிலேயே சரணமடைய மறுத்து, மரணத்திற்குப் பிறகு சரணடையாமல், கைக்குக் கொடியாகவும், உன்னைச் சுமக்கும் ஊர்தியாகவும் மாறிவிட்டான். பக்தியினால் உன்னைச் சுமக்கிறான். பக்தியைச் சோதிக்க என் கலையை ஏவப்போகிறேன். உறுதியான பக்தியுள்ள சூரன் பார்வைக்குப் பயங்கரமுள்ளவன். உள்ளத்தில் உன் தந்தையின் அருள் பெற்றவன். தேவரைச் சிறைவைத்தமைக்கு உன் வேல் தான் அவனைத் தண்டித்தது. உணரா உள்ளங்களில் கலையைச் சிறைவைக்க எண்ணிய சர்வாதிகார அசுரனின் சோதனைக்கு உன் வேலை உதவாவிட்டாலும், சண்டை செய்தே மரணமான பக்தனை நீ ஏவினால் போதும். மாயையின் மைந்தன். இங்கு நிற்பவர்களும் மாயையாகிய வடிவத்தினர். மாயையை நீக்கி மகேஸ்வரன் அடிநிழலை நாடியிருந்தார்களானால், உன்னைத்தான் பேசச் சொல்லியிருப்பார்கள். மாயை வசப்பட்ட காரணத்தினால் தான் மயிலைப் பறக்கச்சொல்லியிருக்கின்றனர்.

மாயையின் புத்திரனே! உன் எதிர்ப்பு சக்திக்கு எனது வணக்கம். உன் உறுதிக்கு எனது கலையைப் படைக்கிறேன். உன்னை இரு கூறாக்கி, ஒன்று மயிலும், மற்றொன்று சேவலுமாக்கிவிட்டான் முருகன். அது போல, உறுப்புக் குறைவையும் கலையின் திறமையையும்

இரு கூறுக்கிப்பார்க்கிறார்கள். எதற்கும் உன்னருள் வேண்டும். குமரி, நீ ஆறுமுகனை நினைத்துத் தியானம் செய். இசைக் கலைஞரே, உமது இசை முழங்கட்டும். தன்னை மறந்து பாடும்.'' எனச் சொல்லிக்கொண்டே தன் சிற்றுளியின் பையை எடுத்தான். ஒரு சிற்றுளியை எடுத்து, மயில் கண்களைத் திறந்தான். திறந்தவுடன் மயில் பறக்கத் தொடங்கியது.

மயில் பறந்தவுடன் ஆதீனம் அவர்கள் 'எட்டிப் பிடி' என்று கத்தினார். சிற்றுளியால் மயிலின் கால் விரலை ஒடித்தவுடன் கீழே இறங்கிற்று. எட்டிப்பிடியென்ற காரணத்தால் அந்த ஊருக்கே 'எட்டுக்குடி'யெனப் பெயர் வந்தது. எட்டிப்பிடி என்பது மருவி எட்டுக்குடி யாயிற்று, பிறகு முருகனின் சிலை நல்லதொரு ஏற்பாட்டின்படி கோவிலில் வைக்கப்பெற்று குடமுழுக்கும் நிகழ்ந்தது.

மயில் பறந்தவுடன் ஏற்பட்ட திகைப்பு இரண்டு நாட்கள் வரையில் அனைவரையும் நம்பமுடியாமல் செய்துவிட்டது. கண்கட்டி வித்தையாயிருக்கலாமோ? இல்லை, சிற்பி மந்திரவாதியாக இருக்கலாமோ? என்று எட்டுக்குடி முழுதும் இதே பேச்சாகயிருந்தது. ஆதினமோ மகிழ்ச்சிக் கடலில் மூழ்கியிருந்தார். சிற்பியைத் தெய்வமாகவே மதித்தார்.

கட்டளைத் தம்பிரானின் மனதில் ஒன்றும் புரியாத ஒரு உணர்ச்சி தாண்டவமாடிக் கொண்டிருந்தது.

உயிருள்ள சிலையை அமைத்த சிற்பியை, வேறுயிடங்களில் இதுபோல் அமைக்கவிடக்கூடாதென்ற எண்ணம் தோன்றலாயிற்று. பரிசு கொடுப்பதுபோல் பாவனை காட்டி, சிற்பங்களை செய்யவிடாமல் செய்துவிடுவதற்கு ஏதாவது வழி கிடைக்குமாவென்ற எண்ணத்தில் இறங்கி விட்டான்.

வாழ்க்கையின் போராட்டத்தைவிட, கலையிடையே நடக்கும் போராட்டத்தையும் பொறுமையின் வடிவத்தோடு, கலையின் அற்புதத்தைச் சுயநலமாக்கிக்கொள்ள ஒவ்வொரு அறநிலையங்களும் பாடுபடுவதையும் நினைக்கும்போது, அருளே உருவான ஆண்டவனை அற்புதமான ஆற்றலோடுதான் பார்த்திருக்கிறார்கள். எவ்விதமான கலையையும், அற்புதங்களோடு இணைக்கும்போது, தன்னுரிமையாக இருக்கவும், தன் ஊரிலிருக்கவுமே எண்ணுவார்கள். இன்று நாம் காரிலோ, புகைவண்டியிலோ பயணம் செய்யுங்கால் நாம் உட்கார்ந்திருந்த இடத்தை நம் இடமென்று உரிமை கொண்டாடுகிறோம். நாம் அமர்ந்த இடத்தில் வேறொருவர் அமர்ந்துவிட்டால், நமக்குச் சினம் வரத்தான் செய்யும். குறிப்பிட்ட ஊர் வந்துவிட்டால் நாம் இறங்கிவிடுவோம். நாம் இறங்கிய பிறகு அந்த இடத்தைப்பற்றி எவ்விதக் கவலையும் எடுத்துக்கொள்வதில்லை.

எங்கும் காணப்படும் உரிமைப் போராட்டம் இது. சில மணி நேரங்களுக்குப் பிரயாணம் செய்யும்போதே, இவ்வித உரிமையை நாம் விரும்புகிறோம். கல்லிற்கு

உயிரளித்து, மயிலும் பறந்துவிட்டதென்ருல், அச் சிலையைத் தன் ஊருக்குப் பெருமையளிக்கும் நிலையமாக வைத்துப் பெருமைப்பட எண்ணுவது ஒரு வகையில் நியாயம்தான்.

நியாயமாயிருந்தாலும், அந்தக் காலத்தில் சுயநலத் தாண்டவம் சர்வாதிகார முறையில்தானிருந்துவந்திருக் கிறது. தனக்கு உதவியாயிருந்தவனுல் உயரிய நன்மை கிடைத்துவிட்டால், அதே நன்மையை மற்ருெருவன் இவனுலடையக்கூடாதென்ற எண்ணமுடையோர் உலகில் இருக்கத்தான் செய்கிருர்கள்.

மனிதனின் இயற்கையான சுயநல மதிப்பைக் கட் டளைத்தம்பிரானும் எண்ணுமலில்லை. அற்புதக் கலையைச் செய்யும் கலைஞர்களின் வாழ்க்கையே சூழ்ச்சியின் வெற் றியாகவேதான் முடிகிறது. கட்டை விரலை வெட்டிய வனின் எண்ணத்தைவிட அதிகமாக எட்டுக்குடி வேலை செய்ய ஆரம்பித்தது. கலையைச் சரியாகச் செய்யாவிட் டாலோ வீண் பழி. சரியாகச் செய்து நல்ல முறையி லமைத்துவிட்டலோ பொருமை. இந்த இரண்டு கோணங்களுக்கிடையே அவன் தெய்வீகக் கற்பனை பலியாகிறது. பலியானுலும் கலையில் உயிர் வைத்திருப் பவனே கலைஞனுய் வாழ்ந்திருக்கிருன். அதனுல், கலை யின் புகழ் பரவினுல் போதும், தன்னைப்பற்றிய கவலையே எடுத்துக் கொள்ளவில்லை.

தன்னைப்பற்றிக் கவலைப்படாத காரணத்தால், அற்புத மான படைப்புகளை எல்லாம் நாட்டிற்குத் தந்து, பலர்

பயன்படச் செய்கின்றனர். வருங்காலக் கலைஞர்களை உண்மைக் கலைஞர்களாக்க, கல்லிலடிப்பதுபோல் என்றும் மறையா உள்ளம் படைத்தவர்கள்தான் கலைஞர்களென்று நமக்கு உணர்த்திவிட்டுச் சென்றிருக்கின்றனர்.

இவ்விதமான சிக்கல் நிறைந்த கலையுலகமாய் இருப்பதால்தான், சிற்பியின் வாழ்க்கையே சிக்கலாய் முடிந்தது. முதல் சிலையின் சிக்கலான பிரச்சனையில் கட்டை விரலைத் தானம் கொடுத்தான். கட்டை விரலைத் தானம் கொடுத்தவனுயிருந்ததால், கலையை எட்டிப் பிடிக்கவேண்டிய நிலைமை சிற்பிக் கிருந்தது.

ஆதீனம் தன்னுடன் உள்ளவர்களைக் கூட்டி மந்திராலோசனை நடத்தத் தொடங்கினர். சிற்பிக்குத் தரும் பரிசைப்பற்றிய பேச்சு. பலர் தங்களின் எண்ணத்தைத் தெரிவித்தனர். ஒருவர் சொன்னதுகூட, சரியாக அமையவில்லை. ஆதீன ஓதுவார் மட்டும் ஒரு அபிப்பிராயத்தைத் தெரிவித்தார். "ஆதீனம் அவர்களே, சிற்பிக்குப் பரிசு நம் ஆதீனமேதான். நம் ஆதீனத்திற்கு மங்காப் புகழ் தேடித் தந்து விட்டான். சிற்பியை நம் ஆதீனக் கலைஞனுகவே அமர்த்தி விட்டால் போதுமானது" என்ருர். கட்டளைத்தம்பிரான் திடீரென்று அவர் கூறியதைக் கேட்டு நகைத்தார். ஆதீனத்தைப் பார்த்து "ஆதீனத்திற்கு ஒரு விண்ணப்பம், சிற்பி ஒரு நாடோடி. கலையே தன் வாழ்வென்று எண்ணும் ஒரு பைத்தியக்காரன். அவனை நம் ஆதீனக் கலைஞனுக ஏற்றுக்கொள்ளக் கூடாது. நாம் தனித்துப்பேசிப் பரிசைத் தீர்மானிப்போம்.

உயிர் கொடுத்த சிற்பிக்குப் பரிசு தருவதைப் பற்றி பலர றியப் பேசுவது சரியல்ல. நம் ஆதீனத்தின் மதிப்பிற்குத் தகுந்தவாறு மரியாதை செய்யவேண்டும், ஓதுவார் நம் ஆதீனத்தின் மதிப்பை நினைக்கிறார், வரவேற்கிறேன். நம் நாட்டில் மட்டும் அந்தக் கலை பரிமளிக்கவேண்டு மென்று நான் எண்ணுகிறேன். எண்ணத்தின் தலைவ னை சிற்பியோ ஒரு துறவி. ஆதலால் யோசித்துச் செய்யலாம்'' எனக் கூறி, கூடிய சபையைக் கலைத்து விட்டார்.

அன்றிரவு அந்தரங்க அறையில் ஆதீனமும், கட்டளைத்தம்பிரானும் சந்திக்கிறார்கள்.

ஆதீ: நீர் என்ன முடிவு செய்திருக்கிறீர் ?

க. த: எனக்கு ஒரு யோசனை. அது மிக்க அச்சந்தருவது.

ஆதீ: சதித் திட்டமா? அஞ்சாமல் சொல்லும்.

க. த: சிக்கலில் கட்டை விரலை வெட்டியதற்குக் காரணம் தெரியுமா?

ஆதீ: நான் விசாரிக்க வில்லை.

க. த: மற்றொரு ஊரில் முருகனை உருவாக்காமலிருக்கத் தான் செய்தது.

ஆதீ: கொடுமை, கொடுமை. பாழாய்போன கலை ஆர்வமே.

க. த: ஆத்திரப்படுவதில் பயனில்லை. சிக்கலை விட நம் ஊரையே தன் கலை விளையாட்டால் பெயர் சூட்டி விட்டான்,

ஆதி: அதற்கு என்ன செய்யவேண்டும்.

க. த: அடுத்த ஊரில் எட்டிப்பிடி யுண்டாகாமலிருக்க வேண்டும்.

ஆதி: என்னய்யா என் மனதை வதை செய்கிறீர்.

க. த: வதை செய்யவில்லை. சிற்பியை வேறு ஊருக்கு அனுப்பும்போது சிலை செய்ய முடியா நிலையில் அனுப்பவேண்டும்.

ஆதி: எது வேண்டுமானாலும் செய்யுங்கள். சிற்பியை மட்டும் உயிரோடு விட்டுவிடுங்கள்.

க. த: உயிருக்கு எந்தவிதக் கெடுதியும் ஏற்படுத்தப் போவதில்லை.

ஆதி: பின் என்னதான் செய்யலாம்?

க. த: மயில் கண்களைத் திறந்து பறக்க வைத்த அவன் கண்களையே நாம் கெடுத்து விட்டால்?

ஆதி: உங்களுக்கு மனமே கிடையாதா?

க, த: மனமிருப்பதால்தான் கண்களோடு விட்டுவிடுகிறோம்.

ஆதி: இல்லாவிட்டால் சமாதிக்கு ஏற்பாடு நடந்து விடுமோ!

க. த: சமாதியின் விழாவுக்கென ஆயிரம் ரூபாய் வரையில் செலவழிக்கலாம்.

ஆதி: செத்த பிறகு பாராட்டு விழா நடத்துவதா?

க. த: பாராட்டு விழாவைவிட, நம் ஊரைப் பலர் பாராட்டும்போது வரும் லாபம் சிற்பியின் உயிரைவிட மேலானது.

ஆதி: இச்செயலில் நான் தலையிட மாட்டேன்.

க. த: நீங்கள் தலையிடாமலேயே நான் ஏற்பாடு செய்யலாமென்றிருக்கிறேன்.

ஆதி: கண்களை எப்படிக் கெடுப்பது?

க. த: பச்சிலை வழியாகத்தான் கெடுப்பது?

ஆதி: கண்களில் பிழிய வேண்டுமே?

க. த: இல்லை, மூன்றுவிதப் பச்சிலையைச்சேர்த்து: வேகவைத்து சாப்பாட்டுடன் கலந்து பாராட்டு விருந்தில் சாப்பிடச் சொல்லுவது.

ஆதி? சாப்பிட்டவுடன் கண் போய் விடுமா?

க. த: நம்மீது சந்தேகப்படாமலிருக்க, சாப்பிட்ட பன்னிரண்டு மணி நேரத்தில் கண் தெரியாது.

ஆதீ : அதற்கு மாற்றம் கிடையாதா?

க. த: ஒரு மருந்துதான் கண்களை மீண்டும் தரும். அது கிடைப்பது அரிது.

ஆதீ : என்ன மருந்து அது.

க. த: பெண்களின் இடது கை இரத்தம் கண்களில் பட்டால், பச்சிலையின் சக்தி மாறிவிடும்.

ஆதீ : குமரி, அந்தத் தியாகத்திற்குத் தயாரானால்......

க. த: காரணம் தெரிந்தாலல்லவா ! காரணமே தெரியாமல் தானே நாம் செய்துவிடப்போகிறோம்.

ஆதீ : வெகுமதியோடு நல்ல பொருளுதவியும் கொடுத்தனுப்ப ஏற்பாடு செய்யுங்கள்.

க. த: இச்செய்திகள் எல்லாம் நம்மோடிருக்கவேண்டும். கலையின் ஆர்வத்தால் செய்யும் பணியே தவிர, வஞ்சமல்ல. நாளை மறுநாள் விருந்திற்கு ஏற்பாடு செய்து விடுவோம்.

ஆதீ : உங்கள் விருப்பம். உங்களின் திருவிளையாடல் சிற்பியின் விதியோடு விளையாடுகிறது.

குமரி தனியாக உட்கார்ந்திருக்கிறாள். சிற்பியை எவ்வகையில் உறுதி செய்வதென நினைக்கிறாள். கலையழகைவிட அவன் உருவழகையே தன்னோடு ஒத்துப் பார்க்கிறாள். சிற்பியைப்பற்றிய எண்ணம் காமாந்த

காரத்திலேற்படாமல் தெய்வீகக் காதலாகவே அமைந்திருப்பதைக் கண்டு தனக்குள்ளாகவே வியப்பெய்துகிருள். சிற்பியின் கலைப்போக்கைப் பழகியதிலிருந்து சிறிதளவு சிற்பக் கலையில் பயிற்சி பெற்றவளாக மாறி விட்டாள்.

காதலைக் கலைவழியில் ஈடுபடுத்தி, அக்கலையைத் தான் கற்றுக்கொள்ள முடிவுசெய்தாள். சிற்பியைக் கலை ஆசாஞக உறுதி செய்தாளே தவிர, வாழ்க்கைக்குத் துணைவஞக உறுதிசெய்யவில்லை. தன் தந்தையின் உத்தரவுபெற்றுச் சிற்பியோடு வாழ்வது தான் சிறந்ததெனக் கொண்டாள். தனக்குள்ள இசைஞானத்தைத் தெய்வீகத்திற்கு உரிமையாக்கிவிடுவதென்றும், சிற்பி உருவாக்கும் சிலையை அமைக்கும் கோவிலிலேயே தன் வாழ்நாளைக் கழிப்பதென்றும் உள்ளத்திலேயே உறுதிகொண்டாள்.

திடீரெனக்கேட்ட ஒலிவந்த திசைநோக்கிப் பார்த்தாள் குமரி. சிற்பி தாளம் போட்டுக்கொண்டே பாடி வந்தான். பாட்டைக்கேட்டவுடன் குமரி வியப்புற்று விடுகிருள். இசை ஞானத்திலும் தேர்ச்சிபெற்றிருப்பதைக் கண்டு, சிற்பியென்ருல் சகல கலைகளிலும் தேர்ந்திருக்கவேண்டும்போலிருக்கிறதென எண்ணிஞள்.

குமரி : கலைஞரே, இசையிலும் பயிற்சியா !

சிற்பி : ஞானபண்டிதனை உருவாக்கும் கலைஞனுக்குச் சகல ஞானமும் தெரிந்திருக்கவேண்டும்.

குமரி : உருவந்தான் இசையா?

சிற்பி : நாதத்தின் தோற்றம். மூலாதாரத்தில் கலக்கும் போதுதான் அருளாதார உருவமுண்டாகும்.

குமரி : அருளாதார வடிவம் ஆறுமுகனு, வேறு தெய்வமா?

சிற்பி : ஆருதாரத்தின் வடிவம் ஆறுமுகன். அவனை ஈன்றெடுத்த சிவனின் வடிவம் மூலாதாரம். தாயின் வடிவம் சிதாகாசம். அதனால், உலக மக்கள் அழகைக் காதலித்து ஆருதாரச்சுகத்தின் வாழ்க்கையைப் பின்பற்ற விரும்புபவர்கள் மிகுதியாகயிருப்பதால்தான் ஆறுமுகனை உருவமாக்கினேன்.

குமரி : உங்களைப் பார்க்கும்போது அழகனுகத் தெரிகின்றீர். கலையைப்பார்க்கும்போது தெய்வமாகத் தெரிகின்றீர். உள்ளத்தையும், அனுபவத்தையும் பார்க்கும்போது, முற்றும் துறந்த முனிவராயிருக்கின்றீர்.

சிற்பி : தவத்தினுலடையும் பலன் குருவைச் சாரும். அன்பின் வழியாக ஏற்படும் பலன்தான் தெய்வீகத் தன்மை பொருந்தியது. அதன் பலன் இருவரையும் சேரும்.

குமரி : என்னைப்போன்றவர்கள் மாணவர்களாய் வந்தால் ஏற்றுக்கொள்வீரா?

சிற்பி : கலைவழியாகத்தான் ஏற்றுக்கொள்ளலாம், அழகுக்குக் கற்பனை செய்து, அலங்காரத்தை

உருவமாக்கி, வாழ்க்கையை அலங்கோலமாக்கும் நிலைவந்தால், ஆசிரியர் மாணவர் என்பதற்குப் பதிலாகக் கணவன் மனைவி தகராறுதான் பார்க்க முடியும்.

குமரி : கலைஞரே, நான் முடிவுசெய்துவிட்டேன். தங்களின் கலையைக் கற்றுக்கொள்ள.

சிற்பி : உணவு கொடுத்த அன்றே மாணவியாக அமைந்து விட்டாய்.

குமரி : உணவின் கனவு நினைவாகிவிட்டது.

சிற்பி : உணவில் உப்பு சிறிதுதான் போடுவோம். கொஞ்சம் மிகுதியாகப் போய்விட்டால் கைப்பு ஏற்பட்டுவிடும்.

குமரி : உப்புக்கும் எனக்கும் என்ன சம்பந்தம்.

சிற்பி : உப்பு கடலில் கிடைப்பதல்லவா?

குமரி : இதுகூடவா தெரியாது.

சிற்பி : கடல் பெரிய நீர் நிலையம். அது பொங்கினல் நாட்டையழித்துவிடும். அதில் தான் உப்பை வைத்திருக்கிருன் இறைவன். சிறிய நீர் நிலையங்களில் நல்ல தண்ணீர். பெரிய இடத்திலிருந்து கிடைக்கும் நீரைச் சிறிதளவுக்குட்கொண்டாலும், பெரிய பலனையடையலாம். அது போல், உன் உப்புப் போட்ட உணவின் திறமை உயிர்கொடுத்

தது. அதனுல் நான் கலையில் பெரிய கடலை ஒத்த வனுயிருந்தாலும், அதில் மறைந்திருக்கும் உப்புப் போன்ற உன் உபசரிப்புதான் என் பெருமையை எடுத்துக்காட்டிற்று. அதனுல் உனக்குக் கலையைக் கற்றுக்கொடுப்பதென்று முடிவுசெய்துதான், நீ வரும்போதெல்லாம் கலையைப்பற்றியே பேசினேன்.

குமரி : தந்தையின் உத்தரவு கிடைத்தபிறகு நான் உங்களைக் குருவாகவே........

சிற்பி : தந்தையின் வாழ்த்தோடு, என் கலையையும் கற்றுக்கொடுக்கிறேன். கவலை வேண்டாம்.

குமரி : கவலை எனக்கில்லை. நீங்கள் கவலையில்லாமலிருப்பதைத்தான் நான் எதிர்பார்க்கிறேன். எனக்கூறி விட்டு ஒரு பாட்டுப் பாடுகிருள்.

ஆதீனம், விருந்து ஏற்பாடு செய்திருப்பதாகவும், அந்த விருந்தில் எல்லோரும் கலந்து கொள்வதாகவும் செய்தி அறிவிக்கப்படுகிறது. சிற்பி தனக்காக விருந்தென்றவுடன், கலைஞனுக்கு இது மரியாதையா? பிறரரியச் செய்யும் விளம்பரமா? என யோசித்தான். ஆம், முதலில் வெறுத்தவர்கள், அற்புதத்தைப் பார்த்தவுடன் தான் விருந்துக்கு ஏற்பாடு செய்தார்களோவென எண்ணினுன்..

கட்டளைத்தம்பிரான் தனக்குத் தெரிந்த மருத்துவக் கலையின் வழியாகக் குறிப்பிட்ட பச்சிலையைத் தேடிக் கண்டுபிடித்துக் கொண்டுவந்தான். பச்சிலை மூன்றையும்

சேர்த்து வேகவைத்தான். வேகவைத்த பச்சிலைகளைச் சோதனை செய்வதற்கு நாய்க்குப் போட்டுப் பார்த்தான். மாலையில் கண் தெரியாமல் அந்த நாய் அலைந்ததைப் பார்த்து மகிழ்ச்சி கொண்டான்.

விருந்துக்கு எல்லோரும் வந்திருந்தனர். கூட்டம் கூட்டமாக செல்வதைப் பார்த்தவர்கள் ஆதீனத்தின் கலையுணர்ச்சியைக் கண்டு புகழ்ந்தார்கள். சிற்பிக்கு மட்டும் விருந்தளிக்கவேண்டியவர், அனைவருக்கும் விருந்தளிப்பது வியப்பை யூட்டியது. அவர் தாராளத்தைக்கண்டு அவ்வூரார் பலவாறு பேசிக் கொண்டனர். விருந்தில் வேறுபாடில்லாமல் அனைவரையும் சமமாக உபசரித்தனர். சிற்பி, வித்துவான், குமரி, ஆதீனம், கட்டளை தம்பிரான் இவர்களுக்கு மட்டும் தனியாக இடம் அமைத்திருந்தார்கள்.

விருந்தில் உணவு தயாரிப்பு உயரியமுறையிலிருந்தது. கட்டளைத்தம்பிரான் சிற்பிக்கு கலைப்பரிசாகத் தான் தயாரித்த பச்சிலை கலந்த உணவைப் பரிமாறினர். ஆதீனத்தின் உள்ளம் மட்டும் ஒரு நிலையில் இல்லை. இருப்பினும் வெளிக்குக் காட்டிக்கொள்ளாமல் நடந்து கொண்டார்.

குமரி மட்டும், கட்டளைத்தம்பிரான் சிற்பிக்கு மட்டும் கலைப்பரிசாகத் தயாரித்தேனென வைத்த உணவை நினைத்து ஐயப்பட்டாள். பிறகு, அன்புடன் அளிக்கும் விருந்தில்கூடவா சதி நடந்துவிடப் போகிறதென தானாகவே ஆறுதல் செய்து கொண்டாள். சிற்பியோ,

விருந்தைச் சுவைத்துச் சாப்பிட்டான். வித்துவான் மட்டும் ஆதீனத்தின் முகமாறுதலையும், கட்டளைத்தம்பிரானின் முகமலர்ச்சியையும் மாறி மாறிப் பார்த்தான். இருவருடைய முகமாற்றங்களையும் நிலைமைகளையும் ஓர்ந்து திகைப்பெய்தினன். சிற்பிக்கு ஏதோ கெடுதி செய்யக் கருதியிருக்கிறார்களென்றே முடிவு செய்துகொண்டான்.

பல்வேறு போராட்டங்களுக்கிடையேதான் விருந்து நடந்தது. விருந்து முடிந்து எல்லோரும் எழுந்திருக்கும் போது, ஆதீனம் கலைஞனுக்காக அளித்த விருந்தில் எல்லோரும் கலந்து கொண்டமைக்கு நன்றி தெரிவித்தார்.

விருந்து முடிந்து வீட்டிற்குச் சென்று களைப்பாகயிருப்பதாகச் சொல்லி சிற்பி படுத்துவிட்டான். குமரி தன் தந்தையிடம் விருந்தில் தனக்கேற்பட்ட ஐயத்தைப் பற்றி சொன்னாள். தனக்கும் ஐயமாகத் தானிருக்கிறது. கட்டளைத்தம்பிரான் மகிழ்ச்சியைக் கண்டாயா ? சதியின் சூழ்ச்சி இதுவாக இருக்கலாமோ ? தம்பிரானின் முகமாற்றத்தைக் கண்டாயா ? அன்பு ஒன்றிய உள்ளம் உடையவர்க்கு அநீதி ஏதாவது ஏற்பட்டிருக்குமோ ? பின்வரும் தீங்கை உணராமல் பிறர்க்குத் தீங்கு செய்பவர்கள் உலகில் இருக்கத்தான் செய்கிறார்கள் என்று மெலிந்த குரலில் அவலச்சுவை கலந்த நிலையில் வித்துவான் கூறி முடித்தார்.

விருந்தில் மயங்கியிருந்தவர்களில் கட்டளைத்தம்பிரானும் ஒருவர். விருந்தைவிட அவர் வெற்றியில் மிதந்து கொண்டிருந்தார். குமரிக்கு ஏதோ மனதில் காரணமில்

லாத குழப்பமிருந்தே வந்தது. அந்தக் குழப்பத்தின் காரணத்தைப் புரிந்து கொள்ள முடியாமல் தவித்தாள்.

உறங்கிய சிற்பி இன்னும் எழவே இல்லை. அயர்ந்து தூங்குகிறான் என்று எண்ணி மாலைப் பொழுதாகியும் எழுப்பவே யில்லை. குமரியும் வித்துவானும் வெற்றியின் மகிழ்ச்சி தூங்கவைத்து விட்டதுபோலுமெனப் பேசிக் கொண்டிருந்தனர். கட்டளைத்தம்பிரானும் ஆளனுப்பி சிற்பியின் நிலைமையைத் தெரிந்துவரச் சொன்னார். வந்தவுடன் சிற்பி அயர்ந்து தூங்குவதைப் பார்த்துவிட்டுச் சென்றுவிட்டான்.

சிற்பி இரவு கண் விழித்தான். ஆனால் கண்தெரியவில்லை. ஓவென்று அலறிவிட்டான். குமரி ஓடிவந்து சிற்பி கண்தெரியாமல் தவிப்பதைப் பார்த்துச் சொல்லொணாத் துயருற்றாள். கண்களில் நீர் அருவிபோல் வழிந்தது. துக்கம் தாளாத நிலையில் தவித்தாள்.

குமரி : கலைஞரே விழித்தவுடன் கண்தெரியவில்லையா ?

சிற்பி : குமரி, கண் தெரியவேயில்லை. இருள் சூழ்ந்து விட்டது.

குமரி: கவலைவேண்டாம். காலையில் ஏதாவது மருத்துவரிடம் செல்வோம்.

சிற்பி : மருத்துவரிடமா? வேண்டாம். கண்ணைக் கெடுத்த தெய்வத்திற்கு, கொடுக்கவும் தெரியும்.

குமரி: இன்னுமா தெய்வ நம்பிக்கை ?

சிற்பி : தெய்வத்தின் வாகனத்தைப் பரிசோதித்தேன். வாகனம் என்னைப் பரிசோதித்துவிட்டது.

குமரி: மயிலுக்கு அவ்வளவு கோபமா ?

சிற்பி: குமரி, தலைமைத் தெய்வம் கருணையோடிருந்தாலும், பக்கத்திலுள்ள தெய்வங்களுக்கு என்மீது கோபமிருக்கலாம்.

குமரி: உங்கள் மீது கோபம் வரவேண்டிய காரணம் ? எனக்கிருக்கும் வருத்தத்தைப் புரியாமல் வேடிக்கை செய்கிறீர்கள்.

சிற்பி : விளையாட்டும், வேடிக்கையும்தான் என்வாழ்க்கை.

குமரி : கண்களை இழந்ததற்குக் காரணம்?

சிற்பி : அழகிய ஆறுமுகனைச்செய்து, அவன் வாகனமாகிய மயிலுக்குப் பறக்கும் சக்தியை அளித்த குற்றத்திற்காகத் தண்டனை.

குமரி : அற்புதத்தைச் செய்தது குற்றமா?

சிற்பி : அறிவுக்குப் புலப்படாத ஒன்றைச் செய்யத் துணியும்போது, அதில் ஆபத்து வருவது இயற்கைதானே.

குமரி : நீங்கள் சொல்வதெல்லாம் எனக்குச் சிறிதும் ஆறுதலை அளிக்கவில்லை.

சிற்பி : குமரி, மயிலின் கண் திறந்தவுடன், பறக்கும் போதே, என் கண்கள் எங்கு போய்விடுமோவெனப் பயந்தேன்.

குமரி : பயப்படவேண்டிய காரணம்?

சிற்பி : கல்லிற்கு உயிர் கொடுக்கும்படி கந்தனை வேண்டினேன். மயிலுக்கு உயிர் கொடுத்தான். அதனால் எதிர்த்துப் போராடிய சூரன் மயிலாக மாறியதால் கண்களும் என் வரையில் எதிர்த்துப்போராடியிருக்கிறது.

குமரி : இதை நான் நம்பமாட்டேன்? ஆதீனத்தின் விருந்தில் ஏதோ சூழ்ச்சி நடந்திருக்கிறது.

சிற்பி : சூழ்ச்சி! அது அவர்களின் பதவியைக் காக்கும் ஒரு படை. அதைப்பற்றி நாம் ஏன் கவலைப்பட வேண்டும். கொஞ்சம் வெளியே கொண்டுபோய் படுக்கவை.

குமரியும் மெதுவாகக் கையைப் பிடித்து அழைத்து வந்து வெளியில் படுக்கவைத்தாள். அவள் அழுத கண்ணீர் சிற்பியின் கையில் பட்டது. மெதுவாக முகத்தைத் தடவிக் கண்ணீரைத் துடைத்தான். அவன் கண்களிலும், கண்ணீர் முத்துமுத்தாக வடிந்தது. அதைப் பார்த்த குமரி சிற்பியின் கண்களைத் துடைத்துவிட்டு ஒன்றும் பேசாமல் சென்றுவிட்டாள்.

அன்புள்ளம் பெற்றவர்க்குத் தான் அளித்த துன்பங் கண்டு உருகினான். தான் ஏன் கலைஞனாய்ப் பிறக்கவேண்டுமென்று நினைத்தான். ''முருகா, உன் எண்ணத்தை யாரறிவார். வடிவேலனுக்குக் கட்டை விரல். மயில் முருகனுக்குக் கண். இன்னும் என்னதான் கேட்கப்போகிறாயோ?

மகனுடைய கறியைக்கேட்ட உன் தந்தை அறிவு உனக்கு வரவில்லையே? அதுவே போதும். உன்னைவிட நான் தைரியசாலி. நீ நேராகச் செய்யாமல் கலையைப் பழிச் சொல்லாக வைத்து, வேறொரு மனிதனால் செய்யச் சொல்கிறாய். பெண்ணுக்காக மாறுவேடமணிந்து சென்ற உனக்குக் கலைஞனின் கலையைப்பற்றி என்ன தெரியும்? போ, உன் கருணையினால் வரும் துன்பங்களைப் பொறுத்துக்கொள்ள முடியும். என் மீது அன்பு கொண்டவர்கள் படும் துன்பத்தைக் கண்டுதான் அவலமடைகிறேன்'' எனச் சொல்லிவிட்டு உறங்கிவிட்டான்.

பொழுது விடிந்தது. வித்துவான் எழுந்திருந்து பார்க்கும்போது குமரி அழுதுகொண்டிருந்தாள். செய்தி தெரிந்ததும் பெரிதும் துக்கமடைந்தார். வேகமாக ஓடி சிற்பியை எழுப்பினார். சிற்பி சிரித்துக்கொண்டே எழுந்திருந்தான். எழுப்பியவர் வித்துவான் என அறிந்தான். கண்ணை யிழந்ததைப்பற்றிக் கவலை வேண்டாமென்று ஆறுதல் கூறினான்.

கட்டளைத் தம்பிரான் சிற்பியை அழைத்துவரும்படி ஆள் அனுப்பினான். ஆள் வந்தவுடன் சிற்பிக்குக் கண் திடீரெனத் தெரியவில்லையெனச் சொல்லச் சொல்லி அனுப்பினார்கள். அனுப்பியவுடன் சிற்பி சிரித்துக் கொண்டே ''இசைவாணரே, வெற்றி யாருக்கென்ற விசாரணை நடக்கப்போகிறது. அதற்குச் சாட்சி என்னை அழைத்திருக்கிறார்கள்.

வித்: கலைஞரே, நீ எதற்குச் சாட்சி?

சிற்பி : வெற்றிக்காகச் செய்த சூழ்ச்சி சரியா என்ற சோதனை.

வித் : தாங்கள் இந்த நிலையடையக் காரணம் அதிகாரப் பீடந்தானு ?

சிற்பி : அதிகாரப் பீடமல்ல. பீடத்திலடங்கிய சுயநலக் கலைப் பைத்தியம்.

வித் : சுயநலக் கலைப் பைத்தியமா ? எப்படித் தெரியும்?

சிற்பி : சிக்கலில் நடந்ததைக் கேள்விப்பட்டிருக்கலாம். வேறு ஊரில் முருகனின் உருவம் இவ்வாறு அமையக்கூடாதென்ற எண்ணமிருந்திருக்கலாம்.

வித் ; எண்ணத்திற்கு நீங்கள் பலியா ?

சிற்பி : கலைக்கே நாங்கள்தான் பலியிடப்படுகிறோம். அது மட்டுமல்ல. எங்களின் பெயரையே தியாகம் செய்துவிட்டுத்தானே வாழ்கிறோம்.

வித் : கட்டளைத் தம்பிரானைப் பார்க்கப் போகிறீர்களா ?

சிற்பி : இனி ஆதீனத்தையும் பார்க்கமாட்டேன். இந்த ஊரிலும் நானிருக்கமாட்டேன். நாளைக் காலை ஊருக்குப் புறப்படவேண்டும்.

வித் : கண்ணற்ற பிறகு எப்படி அயலூருக்குச் செல்ல முடியும்.

சிற்பி : சிற்றுளிப் பையோடு, ஒரு ஊன்றுகோல்.

வித் : சரி, கொஞ்சம் அமைதியாயிருங்கள். நான் வருகிறேன். என்று சொல்லிவிட்டு வீட்டிற்குள் சென்ருர். குமரி மறைந்து நின்று கேட்டுக் கொண்டே யிருந்தாள். சிற்பி ஊருக்குப் போக வேண்டுமென்று சொன்னவுடன் திடுக்கிட்டாள். என்ன செய்வதென்று புரியாமல் நின்ருள். தந்தை வந்து அருகில் நின்றதைக்கூடக் கவனிக்கவேயில்லை. வித்துவான் தன் மகள் நிலைமையைக் கவனித்தார். இரண்டு முறை கூப்பிட்டார். பதிலே யில்லை. கடைசியில் குமரியைத் தொட்டு அசைத்தார். தியானத்திலிருந்து கலைந்தவள்மாதிரி திடுக்கிட்டுத் தன்னிலைக்கு வந்து, தந்தையைப் பார்த்து வணக்கம்கூறினுள். அவள் நிலையுணர்ந்து என்றுமில்லாப் புதுமையாக யிருக்கிறதேயென ஐயுற்று குமரி, சிந்தை மாறிவிட்டதா ?

குமரி : ஆம் அப்பா, சிற்பி எப்பொழுது ஊருக்குப் போகிருர் ?

வித் : நாளையே போகவேண்டு மென்கிருர். எப்படியாவது அவரைப் புறப்படாமல் செய்யவேண்டும்.

குமரி : போவதால் நமக்கென்ன ?

வித் : குமரி, கண் தெரியாதவரல்லவா ?

குமரி : அதிஞல் என்ன ? தாஞகவே போய்விடுவார்.

வித் : குமரியா பேசுவது.

குமரி : ஆம் அப்பா, மகளின் நிலைமை தெரியாத தந்தையிடம் பேசுகிறேன்.

வித் : என்னம்மா, புரியாமல் பேசினால் என்ன செய்வேன்?

குமரி : அப்பா, சிற்பி ஊருக்குப் போகும்போது நானும் உடன் செல்வேன்.

வித் : உன்னை எப்படி அனுப்புவேன்? பருவப் பெண்ணாயிற்றே.

குமரி : பருவப்பெண்ணிடம்மட்டும், உருவம் அமைக்கும் போது உணவு கொடுத்து அனுப்பலாமா?

வித் : உள்ளூரிலிருந்தார், அனுப்பிவைத்தேன்.

குமரி : அப்பா, சிற்பியைவிட, அவரின் கலை என்னைத் தன்வயப்படுத்திவிட்டது.

வித் : அதனால் அவருடன் சென்றுவிடலாமென்று நினைக்கிறாயா?

குமரி : சென்றுவிடுவதால் உங்களுக்கும், எனக்கும் நல்ல பெயர்.

வித் : எப்படியம்மா நல்ல பெயர் கிடைக்கும்?

குமரி : தந்தையே, உணவும் உபசரிப்பும் கலந்ததால், சிலையின் சரித்திரமே மறக்கமுடியாமல் மாறிவிட்டது. கல்லிற்கும் உயிர் கொடுக்கத் திறமையுள்ள சிற்பிக்கு உணவளித்த பெருமை நமக்கு.

அதை ஏற்றுக்கொள்வதற்கு முன் திறமையைப் பரிசோதிக்க எண்ணிய பெருமை கலைக்கு. இதையெல்லாம்விடக் கண்ணிழந்தபிறகும், தன் மகளைத் தியாகம் செய்தானென்ற பெருமை உங்கள் இசைக் கலைக்கு, இசைக்கலையை ஏன் சொல்லுகிறேனென்றால், கண்ணில்லாவிட்டால் கூட இசையை அனுபவிக்கலாம். கண்ணிழந்த சிற்பிக்கு உயிரற்ற ஊன்றுகோல் கொடுக்காமல் இசைபாடும் தன் மகளையே உதவிக்கு அனுப்பினானென்றால் எவ்வளவு பெருமை ? அப்பா, கலங்காமல் பதில் சொல்லுங்கள். கலைஞனுக்குத் தன் கலைதான் காதல், காமம், சொத்துரிமையெல்லாமே தவிர தனக்கென்று ஒன்றைக்கூட வைத்துக் கொள்வதில்லை. அப்படியிருக்க என்னைக் கலைப் பொருளாகவே பாவித்துக்காப்பாற்றுவார். நானும் என் பெண்மையை மறந்து, சிற்பக் கலைக்கு உதவுவேன். நம் ஊரிலிருந்தபொழுது சிறிதளவு சிற்பத்தைப் பயின்றிருக்கிறேன், நான் சரியான நிலையிலிருந்துதான் பேசுகிறேன்.

வித் : எனக்குத் தலை சுழலுகிறதே? குமரி உன்னைப் பிரிய மனம் வரவில்லையே.

குமரி : அப்பா, நான் உங்கள் பொருளல்லவே. என்னை ஒருவனுக்கு மணம் செய்து கொடுத்துவிட்டீர்களானால். நான் அவர்கள் பொருள்தானே. அதுபோல், கலை மணத்திற்கு என்னை அனுப்பப் போகிறீர்கள். உங்கள் மகள் உண்மையில் ஒரு

இசைக் கலைஞனின் புதல்வியாயிருந்தால், என் முயற்சியினுல் கண்கள் மீண்டும் ஒளி பெறும். இது சத்தியமப்பா.

வித் : குமரி, உன் உறுதிக்கு மெச்சினேன். இதுவரையில் உன்னை அனுப்புவதாக இல்லை, கடைசியில் சொன்னுயல்லவா? என் முயற்சியினுல் கண்கள் மீண்டும் ஒளி பெறுமென்று. அதுவே போதும். அன்பு கொண்டவளின் மகளால் கண்கள் மீண்டதென்ருல் கலை உலகமே உன்னை வாழ்த்திப் போற்றும்.

குமரி : அப்படியென்ருல் சம்மதிக்கிறீர்களா அப்பா?

வித் : சம்மதமுண்டு. இன்னும் அந்த முடிவிற்கு வரவில்லை.

குமரி : இன்னும் என்னப்பா சந்தேகம்?

வித் : ஏற்றுக்கொள்ளவேண்டிய இதயத்தை விசாரிக்க வேண்டாமா?

குமரி : பெரியவர்களுக்குள்ள புத்தி சிறுமிக்கு எப்படி வரும்? என்று சொல்லி தந்தையின் காலில் வீழ்ந்தாள்.

சிற்பிதாஞகவேகடந்துகொண்டிருந்தான். சிற்பிக்குக் கண் தெரியாமல்போன செய்தி ஊரெல்லாம் பரவிவிட்டது. பல மருத்துவர்கள்கூட வந்து பார்த்தார்கள். காரணம் கண்டுபிடிக்கமுடியவில்லை. சிற்பிமட்டும் வந்தவர்கள் சொல்வதை மட்டும் கேட்டுக்கொண்டிருந்தானே

தவிர ஒருவருக்காவது பதில்சொல்லவேயில்லை. சிற்பிக்குப் பைத்தியம் பிடித்துவிட்டதாகவே நினைத்து யாரும் வர வில்லை.

ஆதீனத்தில் சொல்லிவிட்டும் வராததால், ஆதீனம் மட்டும் கவலைப்பட்டுக்கொண்டிருந்தார். கட்டளைத் தம்பிரான் எவ்வளவு சொல்லியும் அவர் சிற்பிக்குச் செய்த துரோகத்தை நினைத்துக் கொண்டேயிருந்தார். தான் அழைத்தும் வராத காரணத்தால், சூழ்ச்சியைத் தெய்வீகத் தால் உணர்ந்திருக்க முடியுமெனவே நினைத்தார். அதனால் சிற்பி ஊரைவிட்டுப் போவதற்குள் தானே வலியவாவது சந்தித்துவிட்டு வரவேண்டுமென்றுகூடத் திட்டமிட்டார். கட்டளைத்தம்பிரானும், மற்றவர்களும் சாதாரண சிற்பி யை, அதுவும் குருடானவனைப் பார்ப்பது, மரியாதைக் குறைவெனச் சொல்லித் தடுத்து விட்டார்கள். ஆண்டவ னிடம்தான் முறையிடவேண்டுமென எண்ணி, சிற்பியின் சுகவாழ்வுக்காக உண்ணுவிரதம் மேற்கொண்டு இறைவனை வணங்கினார்.

வித்துவான் சிற்பியிடம் வந்து நின்று விளித்தார். அந்த ஒலிகேட்டு,

சிற்பி : இசைக் கலைஞரே வணக்கம்.

வித்து: தங்களுக்கு ஒரு துணை தேடினேன்

சிற்பி : அகப்படவில்லையோ ?

வித்து: அகப்பட்டது. அதை ஏற்றுக்கொள்ளும் தாங்கள்.......

சிற்பி : பொருளுக்குள்ளவன் சம்மதந்தானே?

வித்து: பொருளை ஒப்புவிக்கத் துணிந்துவிட்டான்.

சிற்பி : இதயமில்லாதவனோ?

வித்து: இதயமுண்டு. கலையிடம் கொண்ட காதலால், தனக்குப்பதிலாக, தன் பொருளைக் கொடுக்க எண்ணுகிறான்.

சிற்பி : பொருள் என்ன சொன்னது?

வித்து: பொருள் கலைச் சந்தையில் வாங்கிவிட்டதாக தெரிவிக்கிறது.

சிற்பி : சந்தையிலுள்ளவன் கலை ஞானமுள்ளவனா ?

வித்து: கலை ஞானத்தோடு, அருள் ஞானத்தையுமுடையவள். பொருள் பெண்மையாயிற்றேயென்ற ஐயம்.

சிற்பி : பெண்மையா? இப்பொழுதுதான் புரிகிறது. கண்ணற்றவனோடு கலங்கி வாழவா ?

வித்து: கலக்கத்தை நினைக்கவில்லை. பணி செய்வதைத் தான் விரும்புகிறாள்.

சிற்பி : அழகை நினைத்து வாழாதவளாக யிருக்கலா மென்று?

குமரி: குறுக்கிட்டு அழகாகக் கடவுளை உருவாக்கியவருக்கு அழகுண்டென்ற நம்பிக்கைவந்துவிட்டால்.

சிற்பி : நம்பிக்கை வந்துவிட்டால், நாடோடிப் பாடலுடன், பிரயாணத்தைத் தொடங்கவேண்டியது தான். குமரி, என் மனதிலுள்ளதைச் சொல்ல விரும்புகிறேன். உன்னை அழைத்துச் செல்வதைப் பற்றிக் கவலையில்லை. அழகு தெய்வீகத்தோடு இணைந்துவிட்டால், பார்ப்பவன்கூட நல்லெண்ணத்தோடுதான் பார்க்கநேரிடும். நான் போவதற்கு முன் நான் உருவாக்கிய சிலையிடம் சென்று, நானும் அவருடன் துணைக்குப் போகின்றேன். கண்ணில்லாமலேயே மீண்டும் உன்னை உருவாக்க நினைத்தால், நீ என் இதயத்தில் தோன்றி அழகான உருவமாக அமைய அருள் செய்யெனக் கேட்டுக் கொண்டு வந்துவிடு.

குமரி : அப்படியே செய்கிறேன். என்று சொல்லிவிட்டுத் தந்தையுடன் கோவிலுக்குச்சென்றாள். கோவிலில் கட்டளைத் தம்பிரானைப் பார்த்தவுடன் அவனைப் பார்க்கப் பிரியமில்லாமல், பார்க்காததுபோலவே உள்ளே சென்று முருகன் முன்னின்று கண்ணீர் வடித்தாள். தந்தையின் பாதத்தையும் வணங்கினாள். இருவரும் வீடு திரும்பினர்.

# என் கண்

காலையில் சிற்பியும், குமரியும் எட்டுக்குடியை விட்டுப் புறப்பட்டார்கள். ஊர் மக்களெல்லாம் ஒன்று கூடி வழியனுப்பினுர்கள். ஆதீனம் அனுப்பிய பரிசைப் பெற்றுக்கொள்ள சிற்பி மறுத்துவிட்டான். வித்துவான் தன் துயரத்தை அடக்க முடியாமல் அலறிவிட்டார். சிற்பியின் கண்களிலிருந்து நீர்த்துளியோடு, ஒரு சொட்டு இரத்தம் வந்தது. திடீரென இரத்தம் வந்ததைப் பார்த்து வித்துவான் அஞ்சினுர். சிற்பி ''உள்ளிருக்கும் முருகனும்'' எனக்காக வருத்தப்பட்டான். அதனுல் என் கண்ணில் இரத்தம் வந்தது. நீங்கள் கவலைப்பட வேண்டாமெனச் சொன்னுன். மயில் கண் திறக்கும்போது பாடிய பாட்டை வித்துவான் பாட, அதைச் சிற்பியும் குமரியும் சேர்ந்து பாடிக்கொண்டே சென்றுர்கள்.

நெடுந்தூரம் நடந்தே சென்றனர். சிற்பியை ஒரு மரத்தடியில் உட்கார வைத்துவிட்டு, குமரி நகரில் வந்து பாடிக் காசு பெற்று உணவு தயாரித்துச் சிற்பிக்குக் கொடுக்கும் வழக்கத்தை ஏற்படுத்திக்கொண்டாள். குமரி யின் பாட்டு இனிமையாயிருப்பதால் எங்கும் கூட்டம் அதிகமாகவே கூடும் வழக்கமாகிவிட்டது. நாளாக சிற்பி யும் குமரியுமே சேர்ந்து பாட ஆரம்பித்தார்கள், சிற்பி தனக்குக் கண்ணில்லையென்பதை மறந்தே மகிழ்வுடன் காலங்கழித்துவந்தான்.

திருவாரூர் வந்து சேர்ந்தனர். அங்கு சிற்பி எதிர் பார்த்த அளவுக்கு மேல் புகழ் கிடைத்தது. குமரியின் பாட்டிற்காக ஒரு மிருதங்கம் வாங்கி, தானே அதை வாசித்துவந்தான். கலை உலகத்தின் கற்பனையெல்லாம் மிருதங்க வாத்தியத்தில் காண்பித்தான்.

ஒருநாள் சிற்பியின் உடல்நிலை சரியில்லாமலிருந்தது. கோவிலில் படுக்கவைத்துவிட்டு குமரிமட்டும் தனியாகச் சென்று பாட்டுப் பாடிக்கொண்டே வீதியில் சென்றாள். அவ்வூரிலுள்ள சித்திரக் கலைஞன் ஒருவன், காதலனை எதிர்பார்க்கும் கன்னியின் ஓவியத்திற்கு விழிகள் வைப் பதைப்பற்றிப் புரியாமல் தவித்துக்கொண்டிருந்தான். குமரியின் பாட்டில் "கருத்தில்லாக் கலைஞனே, கண் தெரியாத கன்னிக்கு" என்ற அடியைப் பாடினாள். சித்திரக்காரன் ஓடிவந்து வழியைத்தான் தேடுகிறேன். கிடைக்கவில்லையெனச் சொல்கிறான். விழி தெரியா என் குருநாதனிடம் வாவெனச் சொல்லிவிட்டுக் கோவிலுக்குத் திரும்புகிறாள்.

குமரி வரவும், சித்திரக்காரனும் கூடவே அங்கு வந்து சேர்ந்தான். சிற்பி காலடி ஒலி கேட்டு. குமரி! யார் அவர்? சித்திரம் எழுதுபவரா? வரவேண்டும்.

குமரி : சித்திரம் எழுதுபவர். நேத்திரம் எழுதமுடியாமல் வந்திருக்கிறார்.

சிற்பி : நேத்திரத்தை எழுதிவிட்டார். விழிவைக்குமிடம் தெரியவில்லை.

சித்திர: கலைஞரே, உமது கலைஞானத்திற்கு வணக்கம். நான் சித்திரக்காரனென்பது எப்படித் தெரியும்?

சிற்பி: நடந்துவரும்போது, இடது காலைவிட வலதுகாலை ஊன்றி நடந்தீர். ஒரு காலை யழுத்தி நடந்ததால் சித்திரக்காரருயிருக்கலாமென்று எண்ணினேன். கண் உருவத்தில் பாதிக்குமேல் மறைத்து அரை விழியாக இடது பக்கமாக எழுதவும்.

சித்திர: எனக்கு இனிமேல் கலை தானுகவே வந்துவிடும். உயர்ந்த கலைஞராகிய தாங்கள் யார்?

சிற்பி: எட்டுக்குடி வேலனை யடித்த சிற்பி.

(சிற்பியின் காலில் வீழ்ந்து)

சித்திர: உயிர் கொடுத்த சிற்பியல்லவா தாங்கள். கண்கள்! ஏன்......

சிற்பி: கண்கள் நன்கு இருக்கின்றன. பல கண்கள் சேர்ந்து என்னைக் கெடுத்துவிட்டன.

குமரி: மயில் கண்ணைத் திறந்ததற்காக, மனிதக் கண்ணைக் கெடுத்துவிட்டனர்.

சிற்பி: நான் வருகிறேன். உங்கள் ஆசியை எனக்குத் தாருங்கள். உங்களின் கலைத்திறன் உலகெங்கும் பரவட்டும். பெண்ணின் இசை ஞானத்தால் நான் தங்களைப் பார்க்க நேர்ந்தது. அந்த இசை ஞானத்திற்கு எனது இதய வணக்கம் என்று சொல்லிவிட்டுப் புறப்பட்டுச் சென்றுன்.

குமரியும் சிற்பியும் திருவாரூரை விட்டுப் புறப்பட்டு மேற்கு நோக்கிப் பயணமானார்கள். பாட்டின் இசை கூட்டச் சென்றுகொண்டே இருந்தனர்.

இருவரும் பெரும்பண்ணையூரையடுத்த சிற்றூரை அடைந்தனர். அந்த ஊரருகே ஓடும் ஆற்றங்கரையில் தங்கினர். சிற்பி ஆற்றிலிறங்கினான். கல் ஒன்றால் தடுக்கப்பட்டுக் கீழே விழுந்தான். குமரி உடனே தாங்கிப் பிடித்தாள். கரை ஏறியவுடன் குமரியைப் பாத்துச் சிரித்தான். குமரி சிரிப்புக்குக் காரணம் தெரியாமல் விழித்தாள். சிற்பி சிரித்துக்கொண்டே யிருந்தான். பைத்தியம் பிடித்துவிட்டதோ வென்று பயந்தாள் குமரி.

சிற்பியின் சிரிப்படங்கிற்று.

சிற்பி : குமரி, முருகன் இன்னும் சோதனை செய்கிறான். கல் தடுக்கியது ஏன் தெரியுமா ?

குமரி : கல்லுக்கு உயிர் கொடுத்து கண்ணிழந்தீர்கள், இந்தக் கல் என்ன செய்யும் ?

சிற்பி : கைவிரலில்லாமல் முருகனை உருவாக்கிய நீ கண்ணில்லாமல் செய்ய முடியுமா வெனக் கேட்கிறது.

குமரி : உருவாக்க நினைத்தால் உருவாகிவிடுகிறது.

சிற்பி : உன் ஒத்துழைப்புக் கிடைத்தால் வேலை எளிதாகி விடும்.

குமரி : ஒத்துழைப்பு மட்டுமல்ல. என் உயிரையே தங்களின் நலத்திற்காகத் தருகிறேன்.

சிற்பி : உயிரைக் கொடுத்துவிடாதே, குமரி. இரக்கம் தெரிவிக்கக்கூட எனக்கு விழியில்லை.

குமரி : ஏளனமாகப் பேசவேண்டாம். கிராமத் தலைவரிடம் கேட்டு வேலையைத் தொடங்கலாம்.

சிற்பி : கிராமத் தலைவரை நீயே கேட்டு, கல்லுக்கும் ஏற்பாடு செய்.

குமரி : நான் போய்ப் பார்த்துவருகிறேன். சற்று அமைதியாய் அமர்ந்திருங்கள் எனச் சொல்லிவிட்டு, கிராமத்திற்குள் சென்றாள்.

குமரி கிராமத் தலைவரிடம் சென்று கேட்க, அவருக்கு, குருடன் எப்படி முருகனை உருவாக்க முடியும் என்ற ஐயம் எழுகிறது. இருப்பினும் ஒப்பங் கொடுத்துவிட்டார். உத்தரவு பெற்ற குமரி, குடிசை ஒன்றை ஏற்பாடு செய்து அதில் தங்குவதற்கும், சிலையை உருவாக்குவதற்கும் திட்டமிட்டாள்.

குடிசையில் குடியேறி வளர்பிறையில் சஷ்டி திதியில் வேலையைத் தொடங்கினான். குமரி இடத்தைக் காண்பித்துக்கொண்டே வருகிறாள். சிற்றுளியின் அடிசூடேறு வண்ணம் ஈரத்துணியை வைத்துப் பிழிந்து கொண்டிருந்தாள் குமரி. சிற்பியின் நிதானத்தைக்கண்டு வியந்தாள். எட்டுக்குடி சிலையைவிட அழகாக இந்தச் சிலை அமையுமென்று உறுதி பூண்டாள். சிற்பி குமரியைப் பாடச்சொல்வான். குமரியின் பாட்டு சிற்றுளியின் அடிக்குத் தகுந்தவாறு அமைந்திருந்தது. ஊர்மக்கள் இந்தக் காட்சியைப் பார்த்து ஆச்சரியப்பட்டார்கள்.

முருகன் சிலை அழகாக முடிந்தது. முருகனுக்குக் கண் திறக்கவேண்டியதுதான் பாக்கி. குமரியின் கலையும் வளர்ந்துகொண்டே வந்தது. குமரியின் எண்ணமும் கலைவழியாகவே கற்பனை உலகில் உலவிக்கொண்டேயிருந்தது. சிற்பியிடம்கொண்ட காதல், கலைத்தொண்டாக மாறிவிட்டதைக் கண்டு மகிழ்ந்தாள். சிற்பியின் ஆயுளுக்குப் பிறகு சிற்பக் கலையை நல்ல முறையில் நாட்டில் பரப்ப நினைத்தாள். இந்த விதமான நினைவு வரும்போது சிற்பியின் உருவத்தை முருக வடிவமாகவே நினைத்தாள்.

சிற்பியோ குமரியை அனுமானத்தால் நிதானித்தான். சிற்பம் செதுக்கும்போது, அவளுடைய சுறுசுறுப்பை அறிந்து கலை உலகத்திற்குப் பெண்ணும் தேவைதானென எண்ணினான். நாளை நல்ல நாளாக இருப்பதால் சிலைக்குக் கண் திறந்துவிடலாமென கிராமத் தலைவர் வந்து சொல்லிவிட்டுச் சென்றார்.

கண் என்றவுடனேயே சிற்பிக்கு எட்டுக்குடி நினைவு வந்துவிட்டது. அன்று மயில்கண்ணைத் திறக்க எண்ணும் போது தனக்குக் கண்ணிருந்ததை நினைத்தான். ஆனால் ஆண்டவனின் கண்களைத் திறக்கத் தனக்குக் கண்ணில்லாமல் போய்விட்டதே ? இருந்தாலும் குமரியின் கண்களிருக்கிறது. அவள் உதவியால் திறந்துவிடலாமென்று நினைத்துக்கொண்டு படுத்துவிட்டான்.

குருடன் உருவாக்கிய சிலைக்குக் கண் திறக்கிறார்களென்றவுடன் கூட்டம் மிகுதியாகக் கூடிவிட்டது.

குமரி அன்று நீராடிவிட்டு, முருகனை வணங்கினாள். "முருகா, என் உதவிகொண்டு உன்னை உருவாக்கினார். அழகாக அமைந்துவிட்டாய். உயிரளித்த சிற்பிக்கு உணவளித்தேன். இன்று உதவியாக என் இதயத்தையும் வாழ்க்கையையும் அவருக்கே அளித்துவிட்டேன். கண் இல்லாவிட்டாலும், அகக்கண்ணின் ஒளி உன்னிடமிருப்பதால்தான் இவ்வளவு அழகாக உருவாக்கிவிட்டார். என் அன்பிற்கும், பணிக்கும் நல்ல பெயர் வாங்கிக் கொடுப்பாயென நம்புகிறேன்" என வேண்டிக்கொண்டாள்.

சிற்பி, அன்று மீதமிருந்த வேலையைச் செய்யத் தொடங்கினான். குமரியும் ஈரத் துணியை வைத்துச் சூடாற்றிக்கொண்டிருந்தாள். பல எண்ணங்களிலிருந்த குமரி, கவனக்குறைவாக துணிக்குப் பதில் இடதுகைக் கட்டைவிரலை நீட்டிவிட்டாள். சிற்றுளி கையைச் சிதைக்க இரத்தம் பீறிட்டுச் சிற்பியின் கண்களில் பட்டது. திடுக்கிட்ட சிற்பி, என்னவெனக் கேட்டான். துணியை மிகுதியாகப் பிழிந்துவிட்டேன் அந்தத் தண்ணீர் தான் கண்களில் பட்டதெனத் தெரிவித்தாள்.

சிற்பி கண் திறக்கும் கட்டம் வந்துவிட்டதை உணர்ந்தான். தடவிக்கொண்டே முருகன் முகத்தைப் பார்க்கிறான். கண்களில் நீர் வழிந்தது.

"முருகா, புறத்திலே குருடனாயிருந்தாலும், அகத்திலே குருடனல்லவே. இதயத்திடையே வளர்த்த உன்னுருவத்தை உருவாக்கினேன். அழகாயிருப்பாயென்று

நம்புகிறேன். கண்களைத் திறந்து விடுவேன். உன்னை வணங்கும் மக்கள் குருடாகிவிட்டால் என்ன செய்வது? வாழ்க்கையில் வெறுப்புற்ற பெண் வந்து உன்னை வணங்கும்போது, வாழ்வில் விருப்பத்தைத் தரவேண்டுமென்று நினைக்கும் போது, கண்ணில்லாதவனுயிற்றேவென, அவள் வாழ்க்கையையும் குருடாக்கிவிட்டாலென் செய்வது? கலைஞர்களை யெல்லாம் சேர்த்து, உன்னழகினை வினவாக்கி, தெய்வீகத் தன்மையை விடையாக்கிக் கொண்டுவரும்போது, குருடனின் நினைவு வருமானல், கலை உலகமே குருடாகி விடாதா? முருகா, கருணை செய்யக் கூடாதா. மயிலுக்குக் கண் திறந்த சிற்பி, தன் கண்களுக்கு மன்ருடுகிருனேவென்ற இரக்கம் வரக் கூடாதா? இரக்கமில்லாவிட்டாலும் உன்னை உருவாக்கியவனுக்குச் சலுகை காட்டக்கூடாதா? உமையவள் தாயன்பால் சேர்த்து முத்தமிடும்போது ஆறுமுகமான நீ, கலைத்தாயன்பால் உன்னைச் சேர்த்து, உருவத்தால் முத்தமிட நினைக்கும் எனக்குக் கண் தரக்கூடாதா? குமரியின் சார்பில்கூடக் கேட்கிறேன். தந்தையை மறந்து, தன் வாழ்வை மறந்து, கலைக்காக வாழவந்த பெண்ணை, உன்னுருவமாக நினைத்துப் பார்த்தாவது எனக்குக் கண்ணைத் தரக்கூடாதா? மன்ருடிக் கேட்கிறேன் மால் மருகா? உன்னையன்றி வேறுதுணையேது'' என்று அழுது கொண்டே முகத்தைத் தடவுகிருன். அங்கிலேயிலேயே சிற்பியின் கண் பார்வை அடைகிறது. கண் தெரிந்தவுடன் **'என் கண் கொடுத்த எட்டுக்குடி வேலவனே'** என்று மகிழ்ச்சி பொங்கப் பாடுகிருன்.

குமரியும் மகிழ்ச்சி தாளாதவளாய் முருகனை நோக்கிப் பாடுகிறாள். பாடிக்கொண்டிக்கும்போதே மயக்கம் வந்து வீழ்ந்து விடுகிறாள். சிற்பி அப்பொழுதுதான் அவள் கையைக் கவனிக்கிறான். உடனே காயத்திற்கு மருந்து போடுகிறான். மருந்தைப் போட்டு முடிந்தவுடன் அவ்வூர் கிராமத் தலைவர் முருக உருவத்தை நிலைநிறுத்திப் பெருவிழா செய்தார். அன்று முதல் அவ்வூருக்கு "என் கண்" என்ற பெயரை வைத்து விட்டார்கள்.

சிற்பி: குமரி, சிக்கலில் என் கை இரத்தம். என் கண்ணில் பெண்ணின் இரத்தம்.

குமரி: கடமையைச் செய்யச் சொல்வதில் முருகனுக்கு நிகரான தெய்வம் இல்லை. அதனால்தான் எல்லாச் சமயத்தினரும் பல கலையினரும் முருகனைப் போற்றுகிறார்கள்.

சிற்பி: அழகை விரும்பாதவன் எவனும் உலகில் இல்லை. அழகுக் கடவுளை சாதி, மத பேதமற்ற முறையில் வணங்குவதுதான் இயல்பு.

எனக்கூறிவிட்டு முருகனை வணங்குகிறார்கள். கிராமத் தலைவர் அவர்களை அங்கேயே இருக்கச் சொல்லிவிட்டார். அவர்களும் அக்கிராமத்தில் தங்கி, கலைத் தொண்டு புரிந்து வாழ்கிறார்கள். சிற்பியின் பெருமையை மக்கள் அறிந்து பாராட்டுகிறார்கள்.

MADURA TAMILSANGAM